The
Good Pastor

நல்ல ஆயன்

"நாம் நல்ல ஆயன்...நமது ஆட்டுக் கிடையைச் சேராத வேறுகேளும் நமக்குண்டு.
அவைகளையுஞ் சேர்த்தணைக்க...ஒரே மேய்ப்பனின் கீழ் ஒரே
ஆட்டுக் கிடை உண்டாகும்." (அரு. 10:11-16.)

புத்தகம் 16. } நவம்பர் 1918. { இலக்கம் 11.

LITURGICAL AND HOMILETIC NOTES.

தேவ சடங்கையும் தேவ வாக்கியத்தையும் பற்றிய குறிப்புக்கள்.

பரமதிரித்துவத்தின் பரிசுத்த நாமத்தால் திருச்சபை நடத்திவரும் மந்திரிப்புச் சடங்குகள் மிக்க ஆச்சரியத்துக்குரிய பலனை நமக்கு விளைவிக்கத் தக்கவையென நாம் அறிந்துகொள்வோமாக. ஒரு சிருஷ்டிக்கு இயல்பிலேயே உண்டாகக்கூடிய தீமைகளை அவை விலக்கும். அன்றியும் அத்தகைய பொல்லாப்புக்களிலிருந்தும் அதை அவை ஆதரித்துக் காப்பாற்றும். சர்வேசுரன் பூலோகத்தில் சிருஷ்டித்த உயிருள்ளவைகளும் உயிரில்லாதவைகளுமான சகல சராசரங்களையும் தம்முடைய ஆசீரால் விரப்பச் சித்தங்கொண்டார். ஆதியாகமம் I அதி. 13-ம் வசனத்தில் சொல்லப்பட்டிருக்கிறபடி "சகலமும் மிக்க நன்றாயிருந்தன." அதாவது: எந்த சிருஷ்டியும் எதேனுங் குறைவுபடாமல் தத்தம் அந்தஸ்தில் சிருஷ்டிக்கப்பெற்று சிறந்து விளங்கிற்று. ஆனால், ஆதித் தந்தை தாயான ஆதாம் ஏவாளின் பாவ வினையால் சகலமான சிருஷ்டிகளுஞ் சீரழிவுக்குள்ளாயின. அப்பாவத்தின் நிமித்தம் அவற்றின்மேல் தேவ சாபம் ஓர் பெரும் பிரவாகம்போல் புரண்டோடி அவற்றிற்குப் பல கேடுபாடுகளை உண்டாக்கிவிட்டது. இச்சாபத்தைப் போக்க வல்லவை இரட்சக பெருமானை நமதாண்டவருடைய அருளும் ஆசீரும், பேறுபலன்களுமேயன்றி வேறல்ல. இவைகளை அவர் தம்முடைய திருச்சபையின் ஆதீனத்தில் சிருஷ்டிகளின் நன்மைக்காக ஒப்படைத்திருக்கிறார். திருச்சபையும் தனக்குள்ள அதிகாரத்தைக்கொண்டு திரித்துவத்தின் திருநாமத்தால் அனுஷ்டித்துவரும் பல சாங்கிய சடங்குகளின் வழியாயும், ஜெபதபங்களின் வழியாயும் அவற்றை சிருஷ்டிகளின்பேரில் பொழியவிடுகிறது. ஆகவே, பூமியின் பலன்களைமாத்திரமல்ல, ஆனால் நிலபுலங்களையும், தோட்டந் தோப்புகளையும், சோலை வனங்களையும், அவை நீர்வளம், நிலவளம் பொருந்தி நல்ல பலனளிக்கும்படி திருச்சபை மந்திரிக்கின்றது. மேலும் புயற்காற்றினாலும், மழையின் மிகுதியினாலும், அல்லது அதின் குறைவினாலும், வெயிலின் தீட்சண்யத்தினாலும், அக்கினியினாலும், மேலும் பலவித

கொள்ளைநோய், பெருவாரிகாய்ச்சல் முதலிய நோய்களினாலும் சிருஷ்டிகளுக்குண்டாகும் தீமைகளைப் போக்க திருச்சபை மந்திரித்தலையும், ஜெபதபத்தையும் பிரயோகித்துக்கொள்ளுகிறது. மிக்க நஷ்டத்தை யுண்டுபண்ணின ஒரு பெருந்தீயை அர்ச். மார்த்தீனர் திரித்துவத்தின் நாமத்தினால் ஆசீர்வதித்தமாத்திரத்தில் அது எல்லோரும் பேராச்சரியப்படும்படி அணைந்துபோயிற்று. பல தருணங்களில் பலமான இடியுமின்னலுமுண்டாகி ஜனங்களை அஞ்சி நடுங்கச்செய்தபோது, அர்ச். வின்சென்டபெர்ரர் என்பவர் பிதா, சுதன், இஸ்பிரீத்துசாந்துவின் திருநாமத்தால் சிலுவை அடையாளம் வரைந்து வேண்டிக்கொள்ளவே, அவைகள் அக்ஷணமேநின்றுபோயின. அர்ச். அருளப்பர், அர்ச். ஆசீர்வாதப்பர், அர்ச். அந்தோனியார் முதலியோர் விஷங்கலந்து கொடுக்கப்பட்ட பானத்தை ஆசீர்வதித்து அருந்தினபடியால் சாவுக்குத் தப்பித்துக்கொண்டார்கள்.

* * *

திருச்சபையின் ஆசாரப்படி மந்திரித்துக்கொள்வதினால் நம்முடைய ஆத்துமத்துக்கும் சரீரத்துக்கும் பல நன்மைகளுண்டாகுமென்பதற் கையமில்லை. பூர்வம் பிதாப்பிதாக்கள் தங்களுடைய குமாரர்களை ஆசீர்வதித்ததினால் அவர்களோடு சர்வேசுரனிருக்க, அவர்களும் பல்லாண்டு பெருவாழ்வு வாழ்ந்தார்கள். அவர்களுடைய மக்களும் அப்படியே தலைமுறைதலைமுறையாக வாழ்ந்துவந்தார்கள். பிதாப்பிதாக்களுடைய ஆசீர் இவ்வளவு பலனுக்குரியதென்றால் திருச்சபையினால் அருளப்படும் ஆசீர் இன்னும் எவ்வளவோ பலனுக்குரியதாகும்! "தந்தையின் ஆசீர்வாதம் பிள்ளைகளின் குடும்பங்களை நிலைநிறுத்தும்" என்று சர்வப்பிரசங்கி யாகமம் IV-ம் அதிகாரம் 11-வது வசனத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. அப்படியானால் திருச்சபை நம்மை ஆசீர்வதிக்கும்போது, நம்முடைய ஆத்துமத்துக்கும் சரீரத்துக்கும் என்ன நன்மைதான் கிடைக்காமற்போகும்? தாம் அரும்பாடுபட்டு சம்பாதித்த சொத்தான அருட்பிரசாதங்களையும், பேறுபலன்களையும நமதாண்டவர் திருச்சபையின் கையில் ஒப்பித்திருக்கிறது மல்லாமல், நமக்குப் பிரயோசனப்படும்படி அவைகளைப் பகிர்ந்துகொடுக்கவும் அதற்கதிகார மளித்திருக்கின்றார். ஆனபடியாலல்லவா திருச்சபையும் "நீங்கள் எதை சேசுக்கிறீஸ்துநாதரின் நாமத்தினால் ஆசீர்வதிக்கிறீர்களோ அது ஆசீர்வதிக்கப்படக்கடவதாக" என்று சொல்லி குருக்களுடைய கரங்களை அவர்கள் குருப்பட்டம் பெறும்போது ஆசீர்வதிக்கிறது? யாதோர் பலனுங் கொடாமற் காடுபோல் மண்டிக்கிடந்த திராட்சதோட்டமொன்றை அர்ச். ஹிலாரியன் மந்திரிக்கவே, திராட்சைக் கொடிகள் குலைகுலையாக காய்க்கத் துவக்கின. அர்ச். எலிஜியுஸ் திராட்ச இரசத்தையும், அர்ச். ஜொர்தான் அப்பத்தையும் மந்திரித்ததினால் அவைகள் அதிகரித்தன. அப்படியே அர்ச். செவரின் எண்ணெயை அதிகரிக்கச்செய்தார்.

* * *

மந்திரித்துக்கொள்வதினால் நாம் பசாசின் சர்ப்பனைகளினின்றும் தப்பித்துக் கொள்ளலாம். அர்ச். சின்னப்பர் சொல்லியிருக்கிறபடி நம்முடைய போராட்டம் பலவீனமுள்ள மனிதர்களோடல்ல, ஆனால் அரூபிகளும், மிகவும் பலனுள்ளவைகளும், அந்தகார நிறைந்துள்ள உலகத்தை ஆண்டுகொண்டுவருகிற ஆகாசத்தின் பிரபுக்களுமாகிய பசாசுக்களோடேயே. தேவ குமாரனை நமதாண்டவரை சோதித்த பசாசு நம்மையுஞ் சோதியாதுவிடாதென்று நாம் அறிவோம். ஜோப் என்பவருடைய சரித்திரத்தின் வழியாயும், இன்னும் பசாசு பிடித்தவர்களின் வழியாயும் நமக்குத் தெரிந்திருப்பதுபோல பசாசானது நம்முடைய இப்பிரபஞ்ச நன்மைகளில் நமக்குப் பொல்லாப்புசெய்யலாகும். ஆனால், பரம திரித்துவத்தின்பேரால் நாம் மந்திரித்துக் கொள்வோமானால், பசாசு நமக்கு யாதோர் தீங்குஞ் செய்யமுடியாது. நமதாண்டவர் தம்முடைய நாமத்தினாலும், பிதா, இஸ்பிரீத்துசாந்துவினுடைய நாமத்தினாலும் பசாசை யோட்டினார். அப்படியே அதை யோட்ட தம்முடைய அப்போஸ்தலர்களுக்கும் வல்லமைகொடுத்தருளினார். மெய்யாகவே ஒவ்வொரு கிறீஸ்துவனுக்கும் இந்த வல்லமையுண்டு. அவன்மாத்திரம் பிதா, சுதன், இஸ்பிரீத்துசாந்துவின் நாமத்தினால் உண்மேல் பக்தி விசுவாசத்தோ

டும், நம்பிக்கையோடும் சிலுவை வரைந்து கொள்வானானால், பசாசு அவனைவிட்டகன்றுபோகும். பசாசு ஆவேசமேறியிருந்த ஓர் பெண்பிள்ளையை அர்ச். தியோடொர் மந்திரித்ததினால். பசாசை அவளிடத்திலிருந்து விரட்டினார். அர்ச். கொளும்பா என்பவர் வெகுகாலம் பசாசினால் துன்பப்பட்டு வந்த ஒரு மனிதனிடத்திலிருந்து சிலுவை அடையாளத்தினால் அதை துரத்தியடித்தார். அர்ச்சியசிஷ்டவர்களனைவரும் திரித்துவத்தின் பரிசுத்த நாமத்தை உச்சரிப்பதினாலும், அல்லது சிலுவை வரைந்து கொள்வதினாலும் பசாசினால் தங்களுக்குண்டாகும் சகல சோதனைகளையுஞ் செயித்துவந்தார்கள். (தொடரும்.)

GRATITUDE.
நன்றியறிவு.

நன்றி மறப்பது நன்றன்று நன்றல்ல
தன்றே மறப்பது நன்று. —(திருக்குறள்.)

நன்றிப் பயன் றூக்கா நாணிலியும் சான்றோர் [முன்
மன்றிற் கொடும்பா டுரைப்பானும்—நன்றின்றி
வைத்த வடைக் கலங் கொள்வானும் இம்மூவர்
எச்சம் இழந்து வாழ்வார். —(திரிகடுகம்.)

நன்றி மறவேல். —(ஆத்திசூடி.)

மேற்கூறிய செய்யுட்களின் கருத்து, ஒருவர் நமக்குச் செய்த நன்மையை ஒருகாலும் மறக்கலாகாது. மறப்பது பாபம். அதன் பயன் பிள்ளைகளில்லாதவர் ஆவர் என்பதே. 'உப்பிட்டவரை உள்ளளவும் நினை' என்பது உலக பழமொழி. உபகாரம்செய்தவர்களை என்றும் மறவாமல், அவர்கள் நமக்குச் செய்துள்ள நன்மைகளின் பெரும் பயனைச் சீர்தூக்கி, கூடுமான காலத்தில் கூடுமான உதவிசெய்ய மனமுள்ளவர்களாயிருக்கவேண்டும். செய்த நன்மையை மறப்பதே பாபம் என்னில், உபகாரிக்கு அபகாரம் செய்வது எவ்வளவோ பெரும் பாதகம் அன்றோ? அப்படிப்பட்ட பாதகரும் பலருளர்; கடன் கொடுத்தவனுக்கு கட்கம் கொடுப்பவருமுண்டு.

ஒருவன் மற்றொருவனுக்கு நன்மை செய்தால், அந்நன்மையை ஏற்றுக்கொண்டவன், நன்மை செய்தவனுக்கு நன்றிக் கடன்பட்டிருக்கிறான். ஆதலால், முதல் விசை நன்மை செய்தவனைக் காணும்போது, அதனை யேற்றவன் தலை வணங்கித் தாழாவிடினும், உள்ளத்தில் என்கிலும் வந்தனஞ்செலுத்துகிறான். இவ்வாறேகாணுந்தோறும் செய்தல்வேண்டும். பலரிடத்து இது சில தினங்களில் கிருஷ்ணபட்சத்துச் சந்திரன் பிறைபோல் தேய்ந்துகொண்டே வந்து, கடைசியில் சற்றுமில்லாது சூன்யமாகிவிடுகிறது. நிலத்தின் வளத்துக்குத் தக்கபடி பயிர் பலனளிப்பதுபோல், ஒருவர் செய்யும் நன்மையும், அது செய்யப் பெற்றவர்கள் நெஞ்சத்திற்குத் தக்கினபடி பலன் தரும். "நன்றியொருவருக்குச் செய்தக்கா லந்நன்றி என்று தருங்கொல் லெனவேண்டா—நின்று தளராவளர் தெங்கு தாளுண்ட நீரைத் தலையாலே தான்தருதலால்" என்றதால், ஒருவர்க்கு யாதாமொரு உபகாரம் செய்தால், அதற்குப் பதில் எப்போது செலுத்தப்படும் என்று எண்ணவேண்டாம். அதற்கு தக்க காலத்தில் பிரதி பலன் அளிக்கப்படும். என்று கூறப்பட்டிருக்கிறது. ஆனால், அநுபோகத்தில் நாம் காண்கிறபடியே, இது யாவரிடத்துமன்று, சிலரிடத்துமாத்திரமே உண்மையாகின்றது. நன்றிகெட்டவர்கள் எத்தனையோபேர் இருக்கிறார்கள். நம்முடைய சத்திய வேத புத்தகத்தில் (புதிய ஏற்பாட்டில்) முதலாய் சேசுநாதரால் குணப்படுத்தப்பட்ட வியாதியஸ்தர் பத்துப் பேரில், ஒருவன் மாத்திரம் திரும்பி வந்து நன்றிசெலுத்தினான். மற்றைய ஒன்பது பேரும் நன்றிகெட்டவர்களானார்கள் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இதுதான் தற்போதும் அநுபவ சித்தி. விஷயம் இங்ஙனமாக, வாக்குண்டாம் இயற்றிய ஔவையார் ஏன் இவ்வாறு மொழிந்துள்ளார் என யோசிக்குமிடத்து, ஒருகால், அவர் காலத்தில் அவ்வாறிருந்ததோ, என்னவோவென்று எண்ணும்படியாயிருக்கிறது. ஆயினும், இம்மையில்செய்தநன்றிக்கு மறுமையில் பயன் அளிக்கப்படுமென்ற கருத்தில் ஔவைப்பிராட்டியார் அவ்வாறு மொழிந்ததாகக்கொள்ளலாம். இது நிற்க, நன்றி எண்ணவேண்டியவர்களுள்,

விசேஷமாய்ப் பிள்ளைகள் தங்கள் தாய் தந்தையரிடத்தில் நன்றி பாராட்டவேண்டியது அவசியம். நன்றிகெட்ட மக்களே பாதகர்கள். ஏனெனில், பணத்தைக் காசைப் பாராமல் பட்சமேகொண்டு பராமரித்து, இஷ்டம்வைத்துக் கஷ்டப்பட்டு, அருமையாய் பெருமையாய் வளர்த்து, ஆதரித்துவந்த பெற்றோரை யவமதித்து, வெறுத்து அவர்களுக்குத் துரோகம் புரிபவனே மிகவும் நன்றிகெட்டவன். பின்னும், தாயை அடித்து உதைத்து, வீட்டைவிட்டு ஓட்டுபவன் எவ்வளவு துரோகியாகிறான். தாயானவள் எவ்வளவோ கஷ்டங்களுக்குள்ளாகிப் பெற்று வளர்த்து, தன்னையும், தன் சுக செளக்கியங்களையும் சற்றும் கவனியாமல், சுருக்கமாய்ச் சொன்னால், தன் (உயிருக்கு ஆதாரமாகிய உணவைக் கொடுக்கையில் தன்) உயிரையே கொடுத்து வளர்க்கிறாள் பிள்ளையை! இப்படிப்பட்ட பிள்ளை தன் தாயை அடித்துக் கொன்றால், அவனை என்னவென்று சொல்லுவோம்? சண்டாளன், பரம துரோகி, தாயைக் கொன்ற தறிதலையன் என்று நிந்திப்போம் அன்றோ? ஆம், சந்தேகமின்றி நிந்திப்போம், தூஷணிப்போம். இது போக, சர்வேசுரன் செய்நன்றி விஷயமாய் நாம் சற்று ஆழ்ந்து சிந்திப்போமாயின், நாமே அவ்வித நிந்தனைக்கும் தூஷணைக்கும் ஆளாயிருக்கின்றோம். எவ்வாறெனில், நமது பரம பிதாவாகிய கடவுளை நமக்காக மனிதனாகப் பிறக்கச்செய்து, அவரை மகா அவமானமாய் கொலை செய்தது நாமே, நமது கன்மமே. அதனோடு விட்டுவிடாமல், தினே தினே அவருக்குப் பின்னும் பின்னும் துன்பமுறுத்தி, நிந்தித்து, அவமானப்படுத்துகிறதும், சொல்லுகிறதும் நமது தொழிலாயிருக்க, நாம் ஒருவனை பார்த்து "நன்றிகெட்டவனாயிராதே" என்று சொல்ல நாவும் எழவில்லை, மனமும் துணியவில்லை. ஆதலால் இனி நாம் நம்மையே நோக்கி, "நன்றி மறவேல்" எனச் சொல்லிக்கொள்ளக் கடவோமாக!

M. P. Ml.

தேவ சிநேகத்தில் வளருவதற்காகமட்டுமே நமது வாழ்நாளை உபயோகிக்கவேணும்.

—(அர்ச். அல்போன்ஸ்)

HISTORY OF ST. MONICA.
அர்ச். மோனிக்கம்மாள் சரித்திரம்.

(All Rights Reserved.)

2-ம் அதிகாரம்.

அஞ்ஞானக்குடும்ப சீவியம்—
அர்ச். மோனிக்கம்மாளின் சாந்தமும்
பொறுமையும்—கர்த்தர் அவளை மூன்று
பிள்ளைகளுக்குத் தாயாக்கி
ஆறுதலளிக்கிறார்.

(இரட்சண்யம் 355—369)

(முன் தொடர்ச்சி.)

மோனிக்கம்மாளிடம் விளங்கிவந்த மாதுரிய குணமும், விநயமரியாதையும், பட்சபாந்தவமும் நாள் போகப்போக பத்ரீஷியூவின் மனதில் பதிந்து நேசத்திரட்சியாய்க் கூடின. தன்னை யவன் எவ்வளவாய் நேசிக்கிறானென்று அவள் வெகுகாலம் கண்டறியவில்லை. அவன் அறிவு மயங்கி புலிக்கொத்த கோபத்துடன் அவள்மேல் சீறிவரும் போதுமுதலாய் அவளை நேசிப்பான். இந்நேசமே அவனுக்குந் தெரியாமல் அவனை மாற்றிவிட்டது. இதுவரைக்கும் அவனிடம் இருந்திராத சுய மரியாதை இப்போது அவனுக்குண்டாகவே, அக்கினிச் சுவாலையானது வானத்தை நோக்கிக் கொழுந்துவிட்டெரிவதுபோல், அவனுடைய நடத்தையில் ஒருவித உயர்ச்சியும் கண்ணியமும் காணப்பட்டன. அர்ச். அகுஸ்தீன் சொல்வது: "நாள் போகப்போக, என் தாயார் என் தகப்பனாருடைய கண்ணுக்கு அழகுவாய்ந்த சுந்தரவதியாய்க் காணப்பட்டாள். இவ்வழகானது தர்மசீல ஒழுக்கத்தைச் சார்ந்த அழகாகையால், அவர் அவளைச் சங்கித்து நேசித்து, ஆ, ஆ, இவள் எப்படிப்பட்ட தர்மகுணபூஷணியென்று, அதிசயப்படத்தொடங்கினார்." உண்மையாகவே இன்னும் பத்ரீஷியூஸ் தன் நடத்தையைச் சீர்திருத்தினவனல்ல. அவன் இன்னும் அறநெறியில் சரியாய் ஒழுகவில்லை. மோனிக்கம்மாள் அவனது மனதில் விதைத்த விதை முளைக்க அநேக வருஷங்கள் வேண்டியிருந்தன. அதற்கு

நீர்பாய்ச்சக் கண்ணீர்ப் பிரவாகமும், அதைப் பக்குவப்படுத்தக் கடுந் தபோமுயற்சிகளும் அவசியமாயிருந்தன. ஆத்துமங்களைச் சன்மார்க்கத்திற் சேர்ப்ப தெப்படியென்று மோனிக்கம்மாள் தான் செய்துவந்த ஜெபத்தின் மூலியமாய் அநுதினமும் அறிந்துகொண்டுவந்தது நல்லதாயிற்று. ஆதலால், நான் மேற்கூறிய சுகுணலட்சணங்களன்றி இன்னொரு சிறந்தலட்சணமும் அவளிடம் துலங்கிவந்தது. அதுவே எல்லாவற்றிலும் மாட்சிமைதங்கியது. அதேதெனில், கடவுள்மட்டில் வரம்புகடந்த நம்பிக்கை. அவர் அகத்தியம் உதவிசெய்வாரென்கிற மாறாத திட விசுவாசம். இவ்விசுவாசம் அவள் இருதயத்தில் எவ்வளவு ஆழமாய் வேரூன்றி இருந்ததென்றால், தான் கேட்கும் மன்றாட்டுக்கள் கொடுக்கப்படாவென்று, அவளுக்கு அவநம்பிக்கை உண்டாக்க யாராலும் முடியாது.

இவ்விதமாய் மோனிக்கம்மாள் அமிழ்ந்தியிருந்த துன்பசாகரமும், தன் புருஷனுடைய துர்நடக்கை அவிசுவாசத்தின்மட்டில் கொண்டிருந்த கவலையும், விசாரமும் சூரிய கிரணத்தின் முன் மாறிமறையும் பனித்துளிபோல் நீங்கத் துவக்குங்காலையில், அவளுக்கு மனோ ஆறுதலாகவும், இன்னும் அதிக நெருக்கபந்தனமாக அவளைப் பத்ரீஷியூஸோடு சேர்த்து இணைக்கவும், சர்வேசுரன் அவளுக்கு மூன்று அழகிய குழந்தைகளை யளித்தார். அக்குழந்தைகளை நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்த்துத் தன் துன்பநேரத்தில் அவைகளை இன்பமாய்ப் பாராட்டி மகிழ்ச்சியடைந்தாள். அவள் சிரேஷ்ட புத்திரன் யாரென்றால், பிற்காலத்தில் மகத்துவக் கீர்த்தியடைந்த அகுஸ்தீன் என்பவரே. அவளுக்கு இருபத்திரண்டு வயது நடக்கும்போது அதாவது இரட்சண்ய 354-ம் வருஷம் நவம்பர் மாதம் 13-ம் தேதி அவர் ஜனனமானார். தான் அவரைக் கர்த்தருக்குப் பிரமாணிக்கமுள்ளவராகப் பயிற்சிசெய்தால், அவர் ஒரு காலத்தில் பெருத்த காரியங்களையெல்லாம் முடிப்பாரென்று அவர் பிறக்கு முன்னமேயே மோனிக்கம்மாள் ஒரு காட்சியில் அறிந்திருந்ததாக சிலர் சொல்லுகிறார்கள். இப்படிப்பட்ட முன்னறிவு அவளுக்கிருந்ததென்றும், தன் மகன் மனந்திரும்பவேண்டுமென்று அதிசயத்துக்குரிய ஞான வைராக்கியங்கொண்டிருந்தாளென்றும், அர்ச். அகுஸ்தீன் எழுதிய "சங்கீர்த்தனம்" என்னும் புஸ்தகத்தைக் கவனமாய் வாசித்தால் நன்றாய்த் தெரியவரும். பின்னுக்கு கீர்த்திபெறவிருந்த தன் குமாரன் மெய்வேத நெறியில் சேரவேண்டுமென்று அவள் ஓயாமல் கண்ணீர் சிந்தி ஜெபம் செய்துவந்ததுடன், தன் மன்றாட்டைக் கர்த்தர் கண்டிப்பா யளிப்பாரென்ற நம்பிக்கையாகிய நங்கூரத்தை ஒரே பிடியாய்ப் பிடித்தும்வந்தாள்.

அர்ச். மோனிக்கம்மாளின் இரண்டாவது பிள்ளையின் பெயர் நாவிஜியூஸ். மாதுரியகுணமுள்ள பாலியன். சுத்தசீலன். தன் சகோதரனைப்போல் அடாத கிருத்தியங்களைச் செய்து பிறகு பச்சாத்தாபப்பட்டு மனந்திரும்பி பேரின்பத்தைச் சுகித்தவரல்ல. அல்லது அவரைப் போல் புண்ணியப் பிரதாபங்களில் சிறந்தவருமல்ல. இவருடைய பெயர் திருச்சபையோர் அநேகருக்குத் தெரியாதிருந்தபோதிலும், அப்பெயரைக் கேட்டவர்களுக்குள் மகிழாதவர்களில்லை.

நாவிஜியூஸ் என்பவர் சகல கலைக்கியானங்களையும் சம்பூரணமாய்க் கற்றுணர்ந்த நிபுணர். குணத்தில் அச்சமும் அடக்கமுமுள்ளவர். எப்போதும் வியாதியஸ்தர். தங்களைப்பற்றியல்லாமல், பிறரைப்பற்றித் தங்கள் சீவியத்தைச் செலவழிப்பவர்களுள் இவர் ஒருவர்.

"மெய்வருத்தம் பாரார்—பசிநோக்கார் [கண்டுஞ்சார்
எவ்வெவர் தீமையு மேற்கொள்ளார்—செவ்வி
அருமையும் பாரார்—அவமதிப்புங் [கொள்ளார்
கருமமே கண்ணாயினர்."

சரித்தை போகப்போக இவருடைய காரியம் நமக்கு விவரமாய்த் தெரியவரும். இவர் எப்போதும், விசேஷமாய் அர்ச். அகுஸ்தீன் தேசாந்திரியாய்ச் சுற்றித் திரிந்துகொண்டிருந்தகாலத்தில், அர்ச். மோனிக்கம்மாளுக்குப் பிரமாணிக்கமுள்ள ஆதரவாயிருந்து உருக்கத்துடன் அவளுக்கு ஆறுதலளித்துவந்தார்.

இவருக்குப் பத்ரீஷியூஸ் என்னும் ஒரு குமாரனும் வேறு இரண்டு குமாரத்திகளும் இருந்ததாகத் தோன்றுகிறது. பத்ரீஷியூஸ் என்பவர் ஹிப்போநகரின் கோவிலுக்குத் தியோக்கனாயிருந்தார். இரு குமாரத்திகளோவெனில் சிறுவயதிலேயே சேசுக்கிறீஸ்துநாதருக்குத் தங்கள் கற்பை யொப்புக்கொடுத்து விரத்துவ அந்தஸ்

தைத் தெரிந்துகொண்டார்கள். நாவிஜியூஸ் என்பவரால் மோனிக்கம்மாளுக்கு உண்டான தொந்தரவும் சஞ்சலமும் சொற்பம். அவரால் அவளுக்குண்டான ஆறுதலோ அதிகம்.

மோனிக்கம்மாளைப்போலத் தன் மக்களின் இகபரநன்மைகளைப்பற்றி மாறாக் கவலை கொண்ட தாயானவள் இவ்வுலகில் எக்காலத்திலும் கிடையாது. பிள்ளைகளுடைய இளகின மனதில் பக்தியின் உணர்ச்சிகளை நாட்டுவது தான், அன்றாட கவலையும் விசாரமும். அவளுடைய இருதயமும், அவளுடைய மனதும், சம்பாஷணையும் மோட்சத்திலேயும் மோட்சத்தைப் பற்றியுமேயிருந்தன. ஆதலால் தன் அருமந்த மக்களின் இருதயங்களையும் மனங்களையும் அம்மோட்சத்தின் பாரிசமாய் உயர்த்துவதே அவளுடைய முக்கிய விருப்பம். அர்ச். மோனிக்கம்மாளுக்கு, அகுஸ்தீன், நாவிஜியூஸ், என்னும் இரு புத்திரர்களன்றி, ஒரு குமாரத்தியுமிருந்தனள். அக்குமாரத்திக்குப் பெர்பெத்துவா என்னும் அர்ச்சியசிஷ்டவள் பெயரைச் சூட்டினாள். அர்ச். பெர்பெத்துவா என்பவள் கார்த்தேஜ் நகரில் கீர்த்தியுடன் வேதசாட்சிபட்டமடைந்தனள். ஆப்பிரிக்காவின் பேர்போன அர்ச்சியசிஷ்டவர்களுள் இவள் ஒருத்தி.

என்ன பரிதாபம்! அகுஸ்தீனுடைய சகோதரியாகிய பெர்பெத்துவாவைப்பற்றி எந்தச்சரித்திரத்திலும் யாதொன்றும் சொல்லப்படவில்லை. ஆகையால், அவளுடைய குணவிலட்சணங்களைப்பற்றி நமக்கு எதுவும் தெரியவில்லை. தன் தாயாரைப்போலவே அவளும் அதிக பக்தியுள்ளவள். வாலிபத்திலேயே கட்டிக்கொடுக்கப்பட்டாள். மேலும் நீர்மேற் குமிழிபோல் நிலையில்லா வாழ்வு! என்றபடி ஒரு குழந்தைக்கு முதலாய்த் தாயாராகுமுன், கொஞ்ச நாளைக்குள்ளாக விதவையாகித் தன் சகோதரனாகிய அகுஸ்தீனுடன் சீவித்துவந்தாள். ஆனால் அவர் என்றைக்குக் குருப்பட்டம் பெற்றாரோ, அன்றைக்கே அவள் அவரைவிட்டு நீங்கினதாக அர்ச். பாஸ்ஸிதியூஸ் என்பவர் சொல்லுகிறார். ஏனெனில், எந்தப் பெண்பிள்ளையும், சகோதரியானாலுஞ் சரி தன்னுடன் வசிக்க அவர் சம்மதித்தவரல்ல. அர்ச். அகுஸ்தீன் குருப்பட்டம்பெற்ற பிறகு, அவள் தன்னைச் சர்வேசுரனுக்கு ஒப்புக்கொடுத்துத் துறவறவந்தஸ்தைத் தெரிந்துகொண்டு அவரால் ஏற்படுத்தப்பட்ட மடங்கள் ஒன்றுக்குச் சிரேஷ்டதாயாரானாள். அர்ச். அகுஸ்தீன் அவளை எப்பொழுதும் அர்ச்சியசிஷ்டவளென்று அழைத்து வந்ததாயும், பாலியத்திலிருந்து மூப்புவரைக்கும், உந்நத புண்ணியங்களின் சுகந்த வாசனை அவளிடமிருந்து வீசிவந்ததாயும் அவர் எழுதிய கடிதங்களால் தெரியவருகிறது.

நாவிஜியூஸுக்கு வணக்கஞ்செய்ய ரோமாபுரியிலும் வேறு பல இடங்களில்லும், பீடங்கள் ஏற்படுத்தப்பட்டிருப்பதுபோலவே இவளுக்கு வணக்கஞ்செய்யவும் அநேக பீடங்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. மேலும் அவருடைய அர்ச்சியசிஷ்ட பண்டங்களும் அகுஸ்தீனுடைய அர்ச்சியசிஷ்ட பண்டங்களும் பூலோக முழுவதிலும் கிறீஸ்துவர்களுடைய அநேக கோவில்களில் பூச்சியமாய் வைத்து வணங்கப்பட்டுவருகிறதுபோலவே, இவளுடைய அர்ச்சியசிஷ்ட பண்டங்களும் அநேக கோவில்களில் வைத்து வணங்கப்பட்டுவருகின்றன.

அர்ச். மோனிக்கம்மாளின் குடும்ப விவரங்கள் இவையே. தன் மக்களைக் கிறீஸ்து வேதத்தில் வளர்த்து, அவர்களுக்குத் தெளிந்த சத்திய வேத படிப்பினையைக் கொடுக்க, அவள் எடுத்துக்கொண்ட உத்தம பிரயாசைகளை நிஷ்பலனாக்க, அவளுடைய அக்கியான புருஷனும், அக்கியான மாமியாரும், ஆண், பெண் ஊழியர் அனைவரும் ஒரே கட்டாய்ச் செய்த சதியோசனைகள் வியர்த்தமாயின.

அவளுடைய மூன்று மக்களும் அர்ச்சியசிஷ்ட பட்டம் பெற்றார்கள். ஓர் உருக்கமுள்ள தாயார் தன்னை முழுவதும் தேவ திருவுளத்திற்கொப்புக்கொடுத்துத் தேவ வரங்களின் உதவியை யடைவாளேயானால், அப்படிப்பட்டவளால் என்னென்னசெய்யமுடியுமென்றும், அரும் புண்ணியங்களுக்கும் தேவ நேசத்திற்கும் ஆலயமாயிருக்கும் இருதயத்தையுடைத்தான அப்படிப்பட்ட தாயாரின் உதரத்தில் உற்பவிக்கும் மக்களின் பாக்கியம் எத்தன்மையானதென்றும், இதனால் நமக்குத் தெளிவாகின்றன.

அர்ச். மோனிக்கம்மாள் விவாக அந்தஸ்தில் ஒரு பாக்கியத்தையும் அடையாவிட்டாலும், கர்த்தர் தனக்குக் கொடுத்த மூன்று குழந்தைகளைப்பற்றியாகிலும் ஒருவிதமான ஆறுதலடைந்தாள். ஆனால் அப்போது முதலாய், தான் அதுவரைக்கும் அநுபவியாத துக்கத்தில் மூழ்கி மனஞ் சோர்ந்ததினால், உலக சீவியமே அவளுக்குக் கசப்பாய்த் தோன்றிற்று. இதன் காரணம் யாதெனில், தன் அஞ்ஞான புருஷன் சீவிக்கும்

அலங்கோலையான சீவியமும், கக்குந் தேவ தூஷணங்களும், நடக்கும் தாறுமாறான நடவடிக்கையுமேயாம். பன்றியானது சேற்றில் புரண்டுருண்டு திரிவதுபோல், பத்ரீஷியூஸ் என்பவன் துன்மார்க்கம் என்னும் படுகுழியில் விழுந்து பாவச் சகதியில் புரண்டுருண்டு திரிந்தான். "ஐயோ! தன் பரிசுத்த மனைவி மாசுமருவில்லா சுத்தசரூபியாயிற்றே! அப்படிப்பட்டவள் தன்னை எவ்வளவு உருக்கத்தோடு நேசித்துவருகிறாள்! அல்லது தனக்கு மூன்று அருமைக் குழந்தைகளுண்டே!" யென்னும் சிந்தனைகள் அவன் துர் ஆசாபாசத்தையாவது மூர்க்க வெறியையாவது அடக்கமுடியாமற் போயின. பாவதோஷங்களை பகிரங்கமாய்க் கட்டிக்கொள்ளவும் அவைகளைப் பிறருக்குச் சொல்லிக்காட்டித் தன்னைத் தானேமெச்சிக்கொள்ளவும் தொடங்கினான். அவனுடைய மனைவியாகிய மோனிக்கம்மாளோவெனில், கிறீஸ்துவள், சுத்தப்பதிவிரதை, பெண்களின் அரசி, மூன்று குழந்தைகளை வயிறாறப் பெற்ற தாயார். இச்சமயத்தில் அவள் அநுபவித்த மனோவாதைகளை எவ்வாக்கால் விவரிக்கக் கூடும?

அர்ச். அம்புரோஸ் என்பவர் சொல்லுகிறது போல், அவள் தன் வீட்டிலிருந்துகொண்டே வேதசாட்சிகள் படும் வேதனைக்குச் சமானமான துன்பத்தைத் தனதிருதயத்தில் அநுபவித்துவந்தாள். அப்படியிருந்தும், அவ்வாதனைகளைப் பொறுக்கமுடியாமல் அவநம்பிக்கைகொண்டு, உத்தமநெறியில் அணுவளவேனும் பிசகினாளில்லை. பாலியத்திலேயே கலியாணமானபடியால், அப்போதே தன் பெற்றோரால் கைக்நெகிழப்பட்டாள். மேலும், விபசாரக்காரனாகிய தன் சொந்த புருஷனால இரண்டகம்பண்ணப் பட்டதினால், விவாக அந்தஸ்தில் தனக்குப் பாக்கியமுண்டாகும் என நவள்கொண்டிருந்த எண்ணங்களெல்லாம், இன்னும அவளுக்கு 27-வயது நடக்கும்போதே மாயமாய் மறைந்துபோயின. இருந்தாலும், அவள் கடவுள்மட்டில முன்னைய விட அதிக நம்பிக்கைவைத்துத் தேவ ஊழியத்தில் அத்தியந்த சுறுசுறுப்பைக் காட்டினாள். இயல்பிலே அவளுக்கிருந்த அடக்க வொடுக்கமும், விவேகமும், தன புருஷனமட்டில்கொண்டிருந்த மதுரநிறைந்த உருக்கமும், நேசமும், நாள் போகப்போக அதிகரித்தே வந்தன. தன் மக்களுக்கு வேதபடிப்பினையையும் நல்லொழுக்கத்தையும் கற்பிப்பதிலேயே கண்ணுங் கருத்துமாயிருந்து, தன் ஒழிவு நேரம் யாவையும் அவ் விஷயத்திலேயே செலவழிப்பாள்.

ஒவ்வொரு தாய்மாரும் இயல்பிலே தம் பிள்ளைகளைச் சிநேகிப்பதுண்டுதான். ஆனால் சமுசாரத்தில் கஷ்டமும் நிர்ப்பந்தமும் படும் தாய்மார், தங்கள் பிள்ளைகளை மிஞ்சிய நேசத்துடன் நேசிப்பார்கள். இந்த நேசம் இத்தன்மையதென்று, உத்தம புருஷர்களுக்கு வாழ்க்கைப்பட்டுப் பாக்கியமாய்ச் சீவிக்கும் ஸ்திரீகள் கண்டுபிடிக்கமாட்டார்கள்.

ஸ்திரீகள், விசேஷமாய் சமுசாரத்தில் நிர்ப்பாக்கியப்படும் ஸ்திரீகள், விவாகஞ்செய்து பிள்ளைகளைப் பெற்றகாலம் கெட்டகாலமாயிருந்தால், துன்மார்க்கம் நிறைந்து கேடுகெட்ட இவ்வுலகத்தில் துஷ்டர் மத்தியில் அப்பிள்ளைகளை வளர்த்துவரவேண்டியிருப்பது எவ்வளவு கஷ்டமான காரியம். ஆனால், அப்பிள்ளைகளின் தந்தைமார் துர்ச் சகவாச தோஷத்திலிருந்து அவர்களைப் பாதுகாத்து இரட்சிக்க வழிதேடாதிருந்தால், அப்பிள்ளைகளின் ஆத்தும ஆபத்து எத்தன்மையதா யிருக்குமென்று நினைக்கும் போது பயங்கரமாயிருக்கின்றது. அப்படிப்பட்ட சந்தர்ப்பத்தில் தங்கள் பிள்ளைகளை வளர்க்க அத் தாய்மார் எடுத்துகொள்ளும் உருக்கம் நிறைந்த கவலையும், அவர்களுக்காக கர்த்தருக்கு ஒப்புக்கொடுக்கும் ஜெப வேண்டுதல்களும், அவர்களுடைய ஆத்துமங்களைத் தாபரித்துக் காப்பாற்ற அவர்கள் எடுத்துக்கொள்ளும் முன்னெச்சரிக்கையான பிரயாசையும், இத்தன்மையவென்று நாவினால் விவரிக்கமுடியாது. இச்சரிதை போகப்போக இவ்விஷயம் நமக்கு வெள்ளிடைமலைபோல் விளக்கமாய்த் தெரியவரும். ஆனால் என்ன பரிதாபம்! நாவிஜியூஸ், பெர்பெத்துவா என்னும் மக்களின் பாலயப்பருவத்திற்கடுத்த விசேஷாதிகள் நமக்கொன்றும் தெரியவில்லை. அவைகள் தெரிந்திருந்தால் எவ்வளவோ நன்மையாயிருக்கும், அவை நிற்கட்டும்.

அப்பிள்ளைகளின் விஷயங்களை விட்டுவிட்டு, அர்ச். அகுஸ்தீனின் குழந்தைப்பருவத்திற்கும் பால்யபருவத்திற்கும் அடுத்த விசேஷாதிகள் எவையென்று விசாரிக்கப்புகுவோம்.

அர்ச். அகுஸ்தீன் வாய்திறந்து பேச ஆரம்பிக்குமுன்னமேயே மோனிக்கம்மாள் அவருக்கு ஞானபோதனைகளை யூட்டத்துவக்கினாளென்று சொல்வது அநாவசியம். அவர் பிறக்குமட்டு முதலாய் அவள் காத்திருக்கவில்லை. கர்த்தர்

தனக்கு ஒரு புத்திரபாக்கியம் கொடுக்கப்போகிருரென்று அவளுக்குத் தெரியவந்ததுதான் தாமதம், உடனே தனது கடமை யேதென்று சிந்திக்கத்துவக்கினுள். மேலும் தனக்கு குழந்தை பிறக்குமுன்னமேயே. அதாவது தன் உதரத்தில் அது கழிக்கவேண்டிய 10-மாதகாலங்களிலேயே, தான் அதை அர்ச்சித்து தேவ நேசத்தில் போஷித்துவரலாகுமென்று, தான் ஓயாமல் வாசித்துவந்த அர்ச்சியசிஷ்டவர்களின் சரித்திரங்கள் மூலியமாயறிந்து, தனது பிள்ளையின் ஆத்துமத்தில் உத்தம விஷயங்கள்மாத்திரம் கல்லின்மேலெழுதிய எழுத்திற்கு நிகராகப் பதிய வேண்டுமென்று, முன்னையவிட உத்தமமான சீவியம் சீவித்து, உருக்கம் நிறைந்த பத்தியோடு கர்த்தரைப் பார்த்து மன்ருடுவாள்.

தான் ஒரு குழந்தைக்குத் தாயாராகப்போகிறதினுல், தன்மேல் விழுந்த உத்தரவாதத்தை யோசித்துப் பயந்தாள். இப்படி அவள் பயந்திற்கும் ஞாயமான முகாந்தரம் உண்டு. கர்த்தர் தனக்கு நியமித்திருக்கும் உன்னத அலுவலை முடிக்கத் தனக்கு ஞானவெளிச்சமும் தேவ பலமும் அத்தியாவசியமென் றுணர்ந்து அவரை நாடி யோடினுள். "தனக் குவமையிலாதான் றள் சேர்ந்தார்க் கல்லான் மனக்கவலை மாற்றலரிது" என்றபடி இரவும் பகலும் ஓய்ச்சலொழிவின்றித் தனது தூய்மை நிறைந்த இருதய கமலம் என்னும் பீடத்தின்பேரில், தன் உதரத்தில் தரித்திருந்த அருமைக் குழந்தையை ஸ்தாபித்து அதனைக் கர்த்தருக்கு ஒப்புக்கொடுத்துவந்தாள். எல்லா கிறீஸ்துவத் தாய்மார்களுக்கும் இவளுடைய நடத்தையானது உத்தமமான மேல்வரிச் சட்டம்போலிருக்கிறது. இம்மேல்வரிச்சட்டத்தை அவர்கள் கண்டுபாவித்து அதன்படி நடந்தால் எவ்வளவு உசிதமாயிருக்கும்!

அர்ச். பிராஞ்சீஸ்கு சலேசியார் சொல்வது: "அர்ச். மோனிக்கம்மாள் பிரதாப நிறைந்த அர்ச். அகுஸ்தீனைக் கருக்கொண்டு அவரைத் தமது உதரத்தில் தாங்கிக்கொண்டிருக்கும் போதே, அநேக விசை அவரைச் சத்திய வேதத்திற்கும், தேவ ஊழியத்திற்கும் ஒப்புக்கொடுத்தாள். "நான் என தாயாரின் உதரத்திலேயே தேவ உப்பை உருசித்தேன்" என்று அவரே சாட்சிகூறுகிருர்.

"என் தாயாரின் உதரத்திலிருந்தே" Ab utero matris meae என்னும் மனதையுருக்கத்தக்க அநுதாப நிறைந்த இவ்வாக்கியத்தை அவர் எழுதிய "சங்கீர்த்தனம்" என்னும் புஸ்தகத்தின் ஒவ்வோர் ஏட்டிலும் காணலாம். அர்ச். அகுஸ்தீன் திவ்ய சேசுநாதரைச் சினேகிக்கக் கற்றிருந்தால், அவருடைய இருதயத்தின் நாடிகள் கடவுளுக்காகவும்.சத்தியத்திற்காகவும் ஓயாமல் துடித்திருந்தால், ஊதாரிப் பிள்ளையைப்போல் தேவ பிதாவின் நேசத்தைத் துரந்து, பன்றியின் தீனியைச் சாப்பிட்டுப் பாவச்சேற்றில் புரண்டுவரும்போது முதலாய் அவருடைய இருதயத்தில் மானம் என்கிற ஒரு சிறு பொறி முற்றிலும் அவிந்துபோகாமல் ஜொலித்துவந்திருந்தால், ஏதேது ஈனமுள்ளதோ, ஏதேது இகழ்ச்சிக்குரியதோ அவைகளின்மட்டில் அவருக்கு வெறுப்பு தட்டியிருந்தால், அவைகள்யாவும் தன் தாயாரின் உதரத்திலிருந்தே தான் பெற்றடைந்ததாக இடைவிடாமல் திருப்பித் திருப்பிச் சொல்லுவார். இதை யோசிக்கும்போது,தான் தன் தாயாரின் 'உதரத்தில் அடைபட்டிருந்த ஒன்பது மாசகாலங்களில்; அவளது எண்ணங்கள், உணர்ச்சிகள் ஆகிய இவைகளின் தூய்மை நிறைந்த பிரதாபப் பெருமையும் மாட்சிமையும் மேன்மையும், எப்படிப் பட்டவையென்று நமக்கு அறிவிக்க ஆசிக்கிருர் போல் தோன்றுகிறது.

கொன்ஸ்தான்தீன், தியோடோஸியுஸ், அர்ச். அமிர்தநாதர், அர்ச். மர்த்தீன, அர்ச். யூஸபியுஸ், இன்னும் கணக்கில்லாத அர்ச்சியசிஷ்டவர்களுடைய சரிதைகளிலிருந்து நாம் அறிகிறதுபோல், பிள்ளைகள் பிறந்தவுடன் அவைகளுக்கு ஞானஸ்நானம் கொடுக்கும் வழக்கம் அக்காலத்தில் இருந்ததில்லை. அப்படி யில்லாத போதிலும், அர்ச். அகுஸ்தீன் பிறந்ததும் அர்ச். மோனிக்கம்மாள் அவரைக் கோவிலுக்குக் கொண்டுபோய், ஞானஸ்நானம் பெறப்போகிறவர்களுடைய பட்டியில் அவர் பெயரை எழுதி வைக்கும்படியாகக் கோரினுள். அப்போதே, அதாவது,சேசுக்கிறீஸ்துநாதர் அவருடைய இருதயத்தைச் சுதந்தரிக்குமுன்னதாகவே, குருசுவாமியார் அவருடைய நெற்றியில் சிலுவையை வரைந்து, அவருடைய வாயில் ஞான அர்த்தத்தைக்காட்டும் உப்பைத் தடவினுர். அவ்வாய் தானே, உன்னத சத்திய வேதத்தின பெருமையை கேட்போர் மனதைக் கவரதக்க வாய்ச்சாலகத்துடன் ஒரு காலத்தில் எடுத்துக்காட்டினது. அவருடைய இருதயமோவெனில், சில காலம் பொய்த் தேவதைகளின் ஊழியத்தில் சிக்கிப்

பிறகு மெய்த்தேவனின் ஊழியத்தில் நிலைபெற்றுப் பிரதாபமடைந்தது.

இப்படிப்பட்ட தாய், தன் பிள்ளைக்குச் செவிலித்தாய்மாரை வைத்துப் பாலூட்டச் சம்மதிக்கமாட்டாளென்று சொல்வது அனாவசியம். தன் குழந்தையை ஞானத்தில் பயிற்சி செய்யும் அலுவல் கஷ்டமான அலுவலென்று அவளுக்குத் தெரியும். ஒரு செவிலித்தாயின் பார்வையில் தன் பிள்ளையை ஒப்பித்தால், மேற்படி அலுவலை முடிப்பதில் தான் எடுத்துக்கொள்ளும் பிரயாசை யாவும் அவளுடைய துர்மாதிரிகையால் நிஷ்பலனாய்ப்போகுமென்று பயந்து, தானே அக்குழந்தையைத் தன் மார்போடு அணைத்துப் பாலூட்டி வளர்த்துவந்தாள். “என் தாய்ப்பாலைக் குடித்து சந்தோஷத்தை அநுபவித்தே” னென்று அவரும் ஆநந்தத்துடன் சொல்லுகிறார். இவ்வமுதோடேயே சேசுக்கிறீஸ்துநாதரின் திவ்ய நாமதேயத்தையும், அவருடைய நேசத்தையும் சேர்த்துக் குடித்தார். தன் தாயின் உதரத்திலிருந்தபோதே அத்தாயின் ஆழ்ந்த விசுவாசத்தின் பலனை யடைந்த இவர், தன் குழந்தைப்பருவத்தில் தன் தாயார் தன்னை மார்போடு அணைத்துக் கன்னத்தோடு கன்னம் வைத்துக் கட்டி முத்தமிட்டு, ஆராட்டிச் சீராட்டி வளர்த்துவரும்போது, அதிலும் உந்நதமும் மாட்சிமையுள்ளதுமான பலாபலன்களைப் பெற்றார்.

இப்படியாய்த் தங்கள் உலக சீவியத்தோடேயே மோட்ச சீவியத்தையும் ஆரம்பிக்கும் புத்திரர் பாக்கியவான்கள். தாங்கள் இப்பூவுலகில் ஜனித்ததும், தங்கள் தாயார் மூலமாய், விசுவாசம், பரிசுத்தத்தனம், கண்ணியம், புண்ணியவொழுக்கம் ஆகிய இவைகளை யறிந்துகொள்ளும் புத்திரர்கள் பாக்கியவான்கள்.

அர்ச். அகுஸ்தீன் தன் குழந்தைப்பருவத்தின் பாக்கியத்தை மனதையுருக்கத்தக்க சில வார்த்தைகளினால் விவரிக்கிறார். “ஓ! என் தேவனே, நான் இம்மரண சீவியத்திற்கு, அல்லது இச்சீவிய மரணத்திற்கு எங்கிருந்து வந்தேனோ அறியேன். என் பெற்றோர் எனக்குச் சொன்னதுபோல், நான் இங்கு பிரவேசித்ததும் நீர் என்னை உமது அன்புள்ள கரங்களில் ஏந்திக்கொண்டீர். நான் உமது இருதயத்தில் கொஞ்சகாலம் தங்கியிருந்தேன், இவ்வளவே எனக்குத் தெரிந்தது” என்று இப்படியவர் கர்த்தரை வாழ்த்திய பிறகு மீளவும் சொல்வார்: “பிறகு நான் இரண்டாம் வரத்தையடைந்தேன். அதேதெனில், என் தாய்ப்பாலைக் குடித்ததில் என் நாவில் தோன்றிய மதுரமேயாம். என் கடவுளே நீர் வாழ்த்தப்படுவீராக. தன் கொங்கையில் இப்படிப்பட்ட மதுரமான அமுதை வைத்திருந்து கொடுத்தவள் அவளல்ல; நீரே அவள் மூலமாய் அதை எனக்கு அநுக்கிரகித்தீர். அதில் எனக்கு வேண்டிய அளவை, நான் அதை விரும்பவும், அதை எனக்கு அவள் தந்தருளவும் நீரே எனக்கும் அவளுக்கும் மனோவாஞ்சையையுண்டாக்கினீர். அளவுபரிமாணமின்றி அவள் பெற்றதை அளவுபரிமாணமின்றி எனக்கு அருளும்படி நேசமே அவளைத் தூண்டியது. மேலும் ஒரு அதிசயத்துக்குரிய ஏற்பாட்டின்படி, அவள் என்னைப் பாக்கியவானாக்குவதில் தன்னையே பாக்கியவதியாக்கிக்கொண்டாள். அத்தனை மனோகரத்தோடு நான் குடித்த பாலுடன், என் இருதயமானது கிறீஸ்துநாதரின் திருநாமத்தையும் அன்பு ஆவலுடன் அருந்தினது. இவையெல்லாம் நான் இப்போது அறிகிறேன். ஆனால் நன்றிகெட்ட நான் அப்போது என்னத்தை அறிந்திருந்தேன். பாலைக் குடிப்பதும் அதன் மாதுரியத்தை உருசிப்பதும், பசியெடுத்தபோது அழுவதும், ஆகிய அத்தனையே தவிர வேறொன்றுமில்லை.”

(இன்னும் வரும்.)

OUR BODY.

நமது சரீரம்.

நமது சரீரமானது ஒரு முரட்டுக் குதிரைக்குச் சமானமென்னலாம். ஏனெனில் குதிரையின் முரட்டுத்தனத்துக்குத் தகுந்தபடி கடிவாளமென்னு மோர் கருவியா லதை எப்படி யடக்கி யாளுகிறோமோ, அவ்வாறே நமது சரீரமான குதிரையை நன்னடக்கையென்னுங் கடிவாளத்தினா லடக்கியாளவேண்டும். கடிவாளத்தைக் கைசோரவிட்டால் குதிரை எவ்விதமான இடக்குகள் செய்யுமோ, அவ்வாறே நன்னடத்தை தவறினால் நமது சரீரமும் பல பல இடக்குகள் செய்யுமென்பது திண்ணம்.

இன்னமும், குதிரைக்கு நல்ல தீனிபோட்டு அதனிடத்திருந்து ஒரு வேலையும் வாங்காமல்

விட்டால், அது கொழுத்துப்போய் மதங்கொண்டு தன்னிஷ்டப்படி திரியுமேயொழிய, நமக்குக் கீழ்ப்படிந்து வேலைசெய்து பிரயோஜனத்தைத் தருமோ? தராது. அதுபோலவே நமது சரீரத்திற்கும் நல்ல தீனி போட்டு கண்டிப்பாய் நடத்தாமல் விட்டாலோ, அது நம்மனதிற்கு அடங்காமல் நமக்கு எத்தனை யெத்தனை கெடுதிகளை விளைவிக்குமென்பதை ஓர் நாவு படைத்த எம்மனிதனாலும் எடுத்துரைக்க இயலாது.

அன்றியும் நமது சரீரத்திற்கு நல்ல தீனி கொடுத்து சொகுசாய் நடத்தினால், அது நமது புத்தியின கட்டுப்பாட்டைக் கடந்து, தன்னிஷ்டப்படி நம்மை ஓர் மரப்பாவையைப்போல் ஆட்டிவைக்குமென்பது திண்ணம்.

புண்ணியத்தில் மெய்யாகவே வர்த்திக்க விரும்பும் புண்ணியவான்கள் இச்சத்தியத்தைத் தீர உணர்ந்திருக்கிறதினாலல்லோ, நித்திரையைக் குறைத்தும், ஒருசந்தி உபவாசங்களை அனுசரித்தும், இன்னும் பலவகைப்பட்ட தவக்கருவிகளையுபயோகித்தும் தமது சரீரத்தைத் தண்டித்து வெகு கண்டிப்பாய் நடத்திவருகிறார்கள்? இல்லாவிட்டால் இச்சரீரமாகிய சத்துரு நாம் உத்தமதனத்தில் ஓங்கி வளர்வதற்கு ஒரு பெருந் தடையாயிருக்குமே.

ஆகையால், புண்ணியத்தில் விர்த்தியடையவும், விசேஷமாய்ப் பரிசுத்த கற்பின் தூய்மை குன்றாது ஜீவிக்கவும் ஆசைகொள்பவர்கள் சரீரத்தைச் சொகுசாய் நடத்தப்படாது. முக்கியமாய்ச் சாப்பாடு, சிற்றுண்டி முதலிய ஆகார வகைகளிலும், பான வகைகளிலும் நாவுக்கு மிஞ்சிய இளக்காரத்தைக் கொடுக்கும் போஜனப்பிரியத்தை யடக்கவேண்டும். ஆகாராதிகளில் மட்டுத்திட்டங் கடந்து பெருந் தீனி தின்பதால் சோம்பலுக்கு இடமாகிறதுமல்லாமல், மிருகத்தன்மை மேலிட்டு, துர் ஆசாபாசங்களும் விசேஷமாய் கற்புக்கு விரோதமான துர்நாட்டங்களும் வெகு வலுக்கொண்டு எழும்பும். இதைக் குறித்தல்லோ வேத புத்தகத்தில் "அவர்களைத் திருப்தியாய்ப் போஷித்தோம். அவர்களோ காமாதுரங்களைப் பண்ணினார்கள்" என்று எரேமியாஸ் (V. 7.) ஆகமத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

நமது திவ்ய இரட்சகர் மோக பசாசைப் பற்றி "இவ்வகைப் பசாசு ஜெபத்தாலும், உபவாசத்தாலும் துரத்தப்படுமே யொழிய மற்றப்படியல்ல" (மத்—XVI—20.) என்று மொழிந்தார்.

மோகபாவத்தை யகற்றி, கற்பைக் காப்பாற்றுவதற்கு மட்டசனம் அத்தியாவசியமென்று சொல்லும்போது, மதுபானத்தை விசேஷித்த விதமாய்க் குறிப்பிட்டுச் சொல்லவேண்டியதில்லை. ஏனெனில், மதுபானத்திற்கும் மோகபாவத்திற்கும் அத்தனை நெருங்கிய சம்பந்தமுண்டு. "மோகத்தை யுண்டாக்கத்தக்க வஸ்துவாம் மதுபானம்" என்று வேத புத்தகத்தில் ஞானியானவர் சொல்லியிருக்கிறார். (பழமொழி—XX—1.)

அர்ச். எரோணிமூஸ் வால வயதுள்ளவர்களை நோக்கி, "சேசுக்கிறீஸ்துநாதருடைய இஷ்டப்பிரசாதத்தில் நிலைநின்று தங்கள் கற்பைக் காக்க விரும்பும் சகலரும், மதுபானம் உயிரைக் கொல்லும் பாஷாணமென்று அதை விலக்குவார்களாக. இளவயதுள்ளவர்களை அழிக்கப் பசாசு உபயோகிக்கும் எத்தனங்களில் முக்கியமானது மதுபானமே. ஏனெனில், வாலிபர்களாகிய அவர்களுக்கு இயற்கையாயுள்ள இரத்தக்கொதிப்போடு லாகிரிவஸ்துவின் உஷ்ணமும் சேர்ந்தால் காமாதுரம் பெரு நெருப்புப்போல பற்றி யெரியும். ஏனோ எரியும் நெருப்பிலே எண்ணெய் வார்க்கவேண்டும்?" என்று மிகவும் இனிமையாயுரைத்துளார்.

நமது சரீரத்தில் மோகமென்னும் அக்கினி எந்நேரமும் கனிந்துகொண்டேயிருக்க, அதில் குபீரென்று தீப்பிடிக்கக்கூடியதும், புத்தியை மயக்கக்கூடியதுமாகிய லாகிரி வஸ்துவைப் போடுவது மதியோ? உண்மையாகவே கள்ளு, சாராயம், கஞ்சா, அபினியாகிய இவைபோன்ற லாகிரி வஸ்துக்களை அருந்தும் பழக்கமுடையவர்கள் கற்புடையவர்களாய் ஜீவிப்பது துர்லபம்.

லாகிரி வஸ்துக்களை அருந்துபவர்கள் யாவரேனும் சரியே, வெளிவேஷத்திற்கு எவ்வளவுதான் சுத்தமுடையவர்களாய்க் காண்பித்தபோதிலும், அவர்கள் உள்ளபடியே மோகதுர்விசாரங்களுக்கும், அக்கிரமச்செய்கைகளுக்கும் உற்றவாசஸ்தலமாயிருக்கிறார்கள் என்பதற்கு ஆட்சேபனையிராது.

மதுபானிகளில் அநேகர், மதுபானத்தின் அதிகாரத்திலில்லாமல் சுய சிந்தையும் தெளிவான புத்தியும் உள்ளவர்களாயிருக்கும்போது மட்டும், காமாதுரமான பேச்சு, செய்கை முதலியவற்றை மெய்யாகவே அருவருத்துத்தள்ளி,

அவைகளுக்குக் கிஞ்சித்தேனும் இடங்கொடுக்காதவர்களைப்போல் நடிக்கலாம். ஆனால், பரிதாபம்! லாகிரி வஸ்துக்களைச் சாப்பிட்டு போதை சிரசிற்கு ஏற ஏற, அவர்களிடத்திலுள்ள நற்சிந்தை, நல்லுணர்வு, யோக்கியதை, நற்செய்கை யாவுமே பெருங்காற்றி லகப்பட்ட புகைபோலும், கடலிற் கரைத்த புளிபோலும், இருந்த இடந்தெரியாது ஒழிய, மிருகத்தன்மை மேலிட்டு துராசைகளும் துர்நாட்டங்களும் அக்கிரமச் செய்கைகளும் மும்முரமாய் எழும்பி, இவற்றிற்கு இணங்கியனவாகிய பகடி, பரிகாசம், அவலட்சணமான பேச்சு, ஆடல்பாடல்கள், அபிநயங்கள் யாவும் சுயேச்சையாயும் வெளிப்படையாயும்தோன்றும். இவைகளே சாதாரணமாய் மதுபானிகளுக்குள்ள பொது இலக்ஷணங்களாம்.

மதுபானிகளில் நாணயக்குடியரென்றும், நாறக்குடியரென்றும் இரு வகுப்பினருண்டு. நாணயக்குடியரென்பவர் மாலை நேரத்தில் யாவர் கண்ணிலும் தென்படாமல், சூரியன் சயனித்து இருளடர்ந்தபின் உருப்படி தெரியாவண்ணம் தலை நிறைய முக்காடிட்டுக்கொண்டு, கடைகளிலோ, அண்டை வீட்டிலோ, மற்றவர்களறியா வண்ணம் சொந்த வீட்டிலோ இரகசியத்தில் மது வுட்கொண்டு, மதுபானத்தின் மயக்கத்தால் மதிமயங்கி யுழல்வாராவர். இவர்களே நாளடைவில் நாறக்குடியராகிறவர்களும். தென்றல் முற்றிப் பெருங் காற்றாவதுபோல், அரை திராம், ஒரு திராமாக ஆரம்பிப்பது அதிசீக்கிரத்தில் அரை புட்டி ஒரு புட்டியாக அதிகரித்து, பல புட்டிகளாகப் பெருக, பிரதமத்தில் இரகசியக் குடியாயிருந்தது வரவர நாளாவட்டத்தில், அறைக்குடி கூடத்துக்குடியாகி, பிறகு திண்ணைக்குடி தெருக்குடியாகி, வாய் நாற, நாசி நாற, உடை நாற, உடல் நாற, வீதி வீடு நாற, போகுமிடம் தொடும் பொருள் யாவும் நாற, இவர்கள் நாறக்குடியரெனப் பெயரெடுத்து, சந்தோ, பொந்தோ, சாக்கடையோ, பள்ளமோ படுகுழியோவெனத் தெரியாது உருண்டு புரண்டு விழுந்து பேச, நா, வாய் குழற, வாயில் வந்தபடியெல்லாம் அதப்பியங்கள் பேசி, கண்டோரால் திட்டி யடிக்கவும், உதைக்கவும் பட்டு, கனங் குறைந்து, மதி யிழந்து, மான மிழந்து, நிதி யிழந்து நிர்ப்பாக்கியராவர்.

சுருக்கிச் சொல்லுமிடத்து மதுபானப் பழக்கத்தால் சரீரத்திற்கு சதாரோகம், பொருள் விரயம், அட்டதரித்திரம், மானக்கேடு, குடும்ப அழிவு, அகாலமரண மாகிய இவைகள் யாவும் நேரிடுவதோடுங் கூட, சர்வஜீவதயாபரக் கடவுளினது சகிக்கவொண்ணு சாபமும் கோபமும் வந்து சேர்கின்றன. நாகரீகம் மேன்மேலும் பெருகி வளரு மிக்காலத்தில், இலாகிரி வஸ்துக்களும் அபாரமாய்ப் பெருகி பரவுகிறதாகையால், மதுபானத்தின்மட்டில் மெய்யான அச்சமும், அருவருப்புங்கொண்டு, பாம்பு, புலி, பேய், பசாசு முதலியவைகளினின்றும் விலகுவதுபோல், அதினின்றும் விலகி, சிறியோர் முதலியோருக்கு நன்மாதிரிகை காண்பித்து நன்னெறியி லொழுகுவது நல்லோர் கடன்.

S. F. L. V.

DUTIES OF A WIFE.
செல்வியர் நியதி.

(மனைவியின் கடமைகள்.)

(*All Rights Reserved.*)

(முன் தொடர்ச்சி.)

46 கொண்டவன் மனது – குன்றப் பேசும்
பெண்டுகள் விரைவில் – பிரிந்திடர் படுவார்.

47 பெருமா பாகனும் – பிழையது புரிந்தால்
தருணம் பார்த்துத் – தண்டித்தல்போலே
புருஷரைப் பிழைத்த – பூவையர் சிக்ஷை
தரணியிற் பெறுதல் – தவறுதன்றே.

48 தன்னுடன் பிறந்தோர் – தன்னை யீன்றோர்
தன்னாயகனின் தாழ்ந்தவ ராவார்.

49 உன்னுட லதனில் – உயர்ந்த பாதி
சென்னிபோன்ற – சிறப்பை வகித்தோன்
உன்னைக் காக்கும் – உறுத்தலுள்ளோன்
உன்னி மணந்த – ஒருவனேயாகும்.

50 கண்ணில் பட்டால் – கரிப்பதுபோலே
மண்ணில் நேசம் – வைப்பவன் பதியே.

51 எல்லா மிருந்தும் – எதுவு மிசைந்தும்
புல்லிட விங்கொரு – புருஷ னில்லாள்
சொல்லருந் துயர்படல் – தொல்வழக்கால்
எல்லெனத் துணைவன் – இருப்பதே
[பாக்கியம்.

52 நோயிலுந் துயரிலும் – நோன்பாக் காத்துத்
தாயிலு மேலாத் – தாங்கிடக் கணவன்
உற்றவள் பாக்கியம் – உகந்தவள் பெருமை
பெற்றவளென்று – பேசிடுமுலகம்.

53 கணவனறியாக் – கடனுடன்பட்டு
அணிபணி செய்தல் – அநீதியாகும்.

54 ஆளன் பொருளை – அவனுரை யின்றி
வாளா வழிக்கும் – மனைவியே கூற்றம்.

55 கணவனுரையைக் – கடந்து நடக்கும்
குணமிலாஸ்திரியவள் – கூரரிவாளாம்.

56 இன்பந்தேடும் – இல்லக்கிழத்தி
அன்பிற் பிரியாள் – ஆர்வலன் சார்ந்தே.

57 எழில் சமாதானம் – இலாதவோர் குடும்பம்
கழிபெருஞ் சாபக் – கட்டினுட் பட்டதே.

58 சுத்த மனதொடு – தூயவ னருளை
நத்திப்புரிவது – நறுமணமாகும்.

59 சித்த மிருவர் – சேர்ந் தொருமித்து
பத்தி யன்புற்றால் – பாக்கியமாகும்.

60 நித்தன் அச்சம் – நிலைத்த காலை
நித்தம் குடும்பம் – நிகழ்சமாதானம்
விர்த்தியாகி – விபுலைமீது
புத்திரர் பெருகப் – பொங்கிடும் மகிழ்ச்சி.

61 கையதை வீசி – கனவுடை குலுக்கி
மெய்யதை மினுக்கி – மிகுதியும் நகைத்து
வையமறிய – வன்மையாய்ப் பேசி
ஐயற நடத்தல் – அழகல மனைக்கே.

62 கல்லேனுங் கணவன் – புல்லேனும் புருஷன்
சொல்லுமோர் துணைவன் – தொழுது
[விழிபடும்
மெல்லியர் தேவருள் – மிகுந்து வாழ்வார்.

63 கொழுநன் மகிழும் – குணமுறும் மனைவி
பழுதிலா வினையின் – பாக்கியமாமே.

64 கண்கண்ட தெய்வம் – கணவனே யென்று
மண்டல மீதில் – வந்தனை புரிந்து
விண்டல மகிழ – விளங்குவாள் மனைவி.

65 அகமுடையானை – அடக்கியாள
அகமதிலெண்ணும் – அநீதக்காரி
சுகமதை யிழந்து – துயர மிகுந்து
இகமதி லுலைய – இயற்றுவாள் தனையே.

66 வரவுக்குமேல் செல – வழிக்கும் மனைவி
சிரமதில் பாரம் – தியங்கிட வேற்றிப்
புருஷன் துன்புறப் – புரிவதுமன்றி
அருமுயிர் தனக்கும் – அறுதியா மவளே.

67 முகவழ கதனிலும் – அகவழ கழகே.

68 அருமைசேர் கல்வி – அறிவில தாயினும்
பெருமைசேர் செல்வப் – பீடிலதாயினும்
உரிமைசே ருடலினல் – லுருவழ கதனிலும்
தருகுண வழகது – தரணியிற் பெரிதே.

69 நிறத்தினும் புறத்தினும் – நிலைத்த வழகினும்
திறத்த வேலை – சிறப்பாம் மனைக்கே.

70 வேலைக் கஞ்சி – விருந்தினர் வந்தால்
செலவுக் கஞ்சி – செல்ல விடுதல்
கணவன் முகத்தே – காய்ந்து விழுதல்
குணமிலா மங்கையின் – கோட்பாடாமே.

(இன்னும் வரும்.)

M. P. Ml.

JEYACEELI'S TREASURE.
ஜெயசீலியின் பொக்கிஷம்.

(முன் தொடர்ச்சி.)

சில நாட் சென்றபின்னர் நோயாளி முழுசெள்க்கிய மடைந்துவீட்டிற்கு அனுப்பப்பட்டான். வாலிபன் வீட்டிற்குச் சென்றபின் ஆஸ்பத்திரியில் நடந்தசம்பவங்களை ஆதியோடந்தமாகத் தன் தாயாருக்கும் சகோதரிக்கும் சொன்னான். முக்கியமாக நர்ஸ் இவன்மீது பக்ஷம் வைத்துப் பக்குவமாகப் பார்த்துவந்ததையும், அவளுடைய சாக்கிரதையினாலும் ஜெபத்தினாலுமே வெகு சீக்கிரத்தில் சொஸ்தமடைந்த விவரத்தையும் சொன்னான். தம்மகன் நர்ஸைப்பற்றி சொன்ன விஷயங்களினால் அவனது தாயாரும், தங்கையும் அவள்மேல் அன்பும் பக்ஷமுங்கொண்டவர்களாய், அகத்தியம் அம்மாதைத் தங்களுடைய வீட்டிற்கு அழைத்து உபசரிக்கவேண்டுமென்று ஆசைப்பட்டார்கள். அப்படியே, சில மணிநேரம் தங்களுடன் கழிக்கவேண்டுமென்று அந்த நர்ஸுக்குக் கடிதமெழுதிக் கேட்டுக்கொண்டதின்பேரில், நர்ஸும் இவர்களுடைய அன்பான விண்ணப்பத்தைத் தட்டாது, ஓர் ஞாயிற்றுக்கிழமையில் அவர்களுடைய விருப்பத்தைப் பூர்த்திசெய்யுமாறு அவர்கள் வீட்டிற்குவந்தாள். அவள் தம் வீட்டிற்கு வந்ததினால் வாலிபனும் அவனுடைய தாய்தந்தையும் சந்தோஷமடைந்தவர்களாய், அவளை வெகு வாஞ்சையுடன் வரவேற்று, சிற்றுண்டி தாம்பூலம் முதலியவை கொடுத்து உபசரித்து, வெகு பக்ஷத்

துடன் விசாரித்தார்கள். இங்ஙனம் இவள் கூடத்தில் பாயின்மீதுட்கார்ந்து தாம்பூலம் போட்டுக்கொண்டு உல்லாசமாக அவர்களுடன் சல்லாபித்துக்கொண்டிருக்கும்போது, அங்கே சுவரில் மாட்டப்பட்டிருந்த ஓர் படத்தை அதிக கவனமாக உற்றுப்பார்த்தாள். அந்தப் படத்தைப் பார்க்கப் பார்க்க அது அவளுடைய வியப்பை அதிகமதிகமாய்த் தூண்டிவிட்டது. அதிசேசமும் எற்பட்டது. அதனோடு சந்தேகமும் பிறந்துவிட்டது. அப்படத்திலிருக்கும் உருவத்தைத் தான் பார்த்திருப்பதாகவும், அவ்வுருவம் குறிப்பிக்கிற பேர்வழி தனக்கு நன்றாகப் பழக்கமுள்ளவராகவும், தான் அவரை இதற்குமுந்தி எங்கேயோ பார்த்திருப்பதாகவும் உணர்ந்து, இந்தப் படத்திலிருப்பவர் யாரென்று தெரிந்து சந்தேகத்தைத் தீர்த்துக்கொள்ளுமாறு கூச்சப்படாமல், "இதோ அம்மா! என்னெதிரே மாட்டியிருக்கும் படம் யாருடைய"தென்றும் "அந்தப் படத்தின் முகத்தை நான் இதற்குமுந்தி எங்கேயோ பார்த்திருக்கிறதாக ஞாபகமிருக்கிற"தென்றும் சொன்னாள்.

அதற்கு வாலிபன் உத்தாரமாக, அந்தப் படம் தனது தகப்பனாருடைய படமென்று சொல்லி, "அவரை நீர் எங்கே பார்த்திருக்கக்கூடு"மென்று நர்ஸைக் கேட்டான்.

"நான் பள்ளிக்கூடத்தில் படித்துவந்தபோது ஏறக்குறைய இந்தப் படத்திலிருப்பவருடைய சாயலையொத்த ஒருவர் நாங்கள் கோவிலிலிருந்து வரும்போதும் போகும்போதும் எங்களை நோக்கிக் கவனிப்பதுண்டு. ஆனால் அவர் உங்களுடைய தகப்பனாராக இருந்திருக்கமாட்டார். என்னவோ, இந்தப் படத்தைப் பார்த்தபோது எனக்குப் பழய நினைவு வந்தது" என்று சொன்னாள். இதற்குள்ளாக வேறொரு சம்பாஷணையைத் தொடங்கிவிட்டார்கள். பிறகு 12-மணியானதும், ஸ்நானஞ்செய்து போஜனஞ்செய்ய உட்கார்ந்தார்கள். பரிமாறப்பட்டவையெல்லாம் மரக்கறி பதார்த்தங்களாகவே யிருந்தபோதிலும் அவையனைத்தும் அதிக நேர்த்தியான உருசிகரபாகங்களாயிருந்தமையால், அவைகளைத் திருப்திகரமாய்ச் சாப்பிட்டார்கள். சாப்பாடு முடிந்தபிறகு மத்தியான வெயில் சற்றுத் தணிந்ததும் அவர்கள் யாவரும் வீட்டைவிட்டு அருகாமையிலிருந்த நிழல் அடர்ந்த தோட்டத்திற்கு அம்மாது சிரோமணியை அழைத்துக்கொண்டு, சுற்றிப்பார்த்துக்கொண்டு வரும்பொருட்டுப் புறப்பட்டார்கள். இந்த கொஞ்ச சவகாச நேரத்தை சந்தோஷமாகக் கழிக்க யாதொரு குறைவுமின்றி நடத்திவந்த வாலிபனது மனம்மட்டும் சற்று குழம்பியிருந்ததாக அந்நங்கை கண்டாள். "அகத்தினழகு முகத்தில் தெரியு"மென்பதுபோல அவன் உள்ளத்திலிருந்த சங்கடத்தை அவனுடைய முகமே தெளிவாக காட்டிவிட்டதைப் புத்திசாலியாகிய நர்ஸ் அறிந்துகொண்டாளாயினும், அதைக் குறித்து வெளியில் பிரஸ்தாபிக்கவுமில்லை, வாலிபனைக் கேட்கவுமில்லை. கடைசியாக இவர்கள் யாவரும் தோட்டத்தை அடைந்து குளிர்ந்த காற்று வீசும் ஓர் மரத்தடியிலே உட்கார்ந்து, சில பக்ஷணங்கள் புசித்து, தாம்பூலம் தரித்துக்கொண்டு உல்லாசமாகப் பேசிக்கொண்டிருந்தார்கள். அப்போது வாலிபன் தன் தாயாரையும் தங்கையையும் பார்த்து "உங்களுக்கு ஒரு நூதனமான காரியத்தைச் சொல்லப்போகிறேன். ஆனால் அது இங்கு விஜயம் செய்திருக்கும் நர்ஸுக்கே அதிக ஆச்சரியத்தை உண்டுபண்ணும். இங்கு நமது மத்தியில் எழுந்தருளியிருக்கும் இந்தம்மாளாலேயே நான் இப்போது ஜீவனோடிருக்கிறேன். ஆதலால், எனது பிராணன் அந்தம்மாளுக்குரியது. இச்செல்வியாகிய நர்ஸுமட்டும் என்னைச் சரியாய்க் கவனிக்காமலும், விசேஷமாய் எனக்காக உருக்கமான செபஞ்செய்யாமலு மிருந்திருப்பார்களேயாகில், என்னை நீங்கள் கண்டிருக்கமாட்டீர்கள். நானும் உங்களுடைய மத்தியிலிருக்கும்படியான பாக்கியத்தை அடைந்திருக்கமாட்டேன். ஆதலால் யான் சொல்லும் வார்த்தைகளையும் என் விருப்பத்தையும் செவியுற்று, நல்வாக்கருளத் தயை செய்யப் பிரார்த்திக்கிறேன். அஃதியாதெனில், இத்தென்னிந்தியாவினுக்கோர் திலதம்போல் விளங்கிவரும் உன்னதகலாசாலையாகிய திருச்சி ஞப்பள்ளி அர்ச். சூசையப்பர் கலாசாலையி... நான் பீ.ஏ., பட்டப் பரிக்ஷைக்குப் பயின்றுவரு கால், கத்தோலிக்கு வேதத்தைப்பற்றிக் கே விப்பட்டிருந்ததன்றியே அவ்வேதத்தைப்பற்றி அதிகமாக வாசித்துமிருக்கிறேன். அவ்வேதத்தி சொல்லப்பட்டிருக்கும் விஷயங்கள் யாவும் மெ யென்றும், அந்த வேதமே சத்திய வேதமென் கண்டுணர்ந்தேன். அந்த உண்மையான நல் வேதத்தில் நான் சேராமலிருந்தால், நான் இ பூவுலகில் மானிட ஜென்மமெடுத்துப் பயனில் யென்றே கருதுகிறேன். ஏற்கெனவே நா என் உள்ளத்திலும், இருதயத்திலும் இவ்வே

ளைத் தழுவிக்கொண்டே னென்பதை வெகு நாளாக என் மனதிலே இரகசியமென்னும் பூட்டிட்டு, மௌனமென்னும் சாவியால் பூட்டிவைத்திருக்கிறேன். ஆனால். இன்றையத்தினம் உங்கள் யாவருடைய முன்னிலையிலும் என் அபிப்பிராயத்தை வெளிப்படையாக வெளியிடுகிறேன். இனி நான் வெளியரங்கத்தில் அவ்வேதத்தை அநுஷ்டிக்க ஒரு நிமிஷமாவது தாமதிக்கமுடியாது. அந்தோ! என் மனம் பதறுகிறது. என் இருதயம் துடிக்கின்றது. ஆசை அதிகரிக்கின்றது. மேலும் இவ்விடத்தில் கருணையுடன் விஜயஞ்செய்திருக்கும் கன்னிகையும் எனக்கு வேண்டிய உதவி ஒத்தாசையாவும் செய்யப் பின்வாங்காளென்று நம்புகிறேன். அன்றியும் இன்னொரு விஷயமுமிருக்கிறது. இவ்விடம் பரோபகார சிந்தையைப் பூரணமாகக்கொண்டிருக்கும் மாது சிரோமணிக்கு நான் தக்க கணவனாகக் காணப்பட்டால் எனது உயிரையே அவள் க்ஷேமத்திற்குத் தத்தம்செய்ய அடியேன் காத்திருக்கிறேன். இம்மாதையொத்தசிறந்தசிரோமணிகளைக்கனப்படுத்தி, அவர்களுடைய உன்னதமான நன்னடக்கைகளுக்கு உடன் பங்காளியாயிருந்து. அவற்றால் வரும் சந்தோஷத்தை இருவரும் பங்கிட்டுக்கொள்வதைவிட ஒரு மனிதனுக்கு வேறென்ன பாக்கியம் இவ்வுலகில் கிடைக்கப்போகிறது? ஆனால், அக்கன்னிகையின் அபீஷ்ட மெப்படியோ அறியேன்" என்று சொல்லிமுடித்தான்.

மற்ற மூவரும் ஸ்தம்பித்து மௌனமாக இருந்தார்கள். சற்றுப் பொறுத்து நர்ஸ் ஆனவள் தாழ்ச்சியுடன் வாலிபனை நோக்கிச் சொன்னதாவது: "தாங்கள் கத்தோலிக்கு வேதத்தில் சேர்ந்துவிடத் தீர்மானித்திருப்பதைப்பற்றிக் கடவுளுக்கு நன்றி செலுத்துகிறேன். அதற்காகச் சந்தோஷப்படுகிறேன். தாங்கள் வியாதியாயிருந்ததும், நான் தங்களுக்கு சிகிச்சைசெய்யப் பாக்கியம்பெற்றதும், அதன் சம்பந்தமாகத் தாங்களென்னை யழைக்க நேரிட்டதும், அதன்படியே நான் உங்களெல்லோரையும் பார்க்க நேர்ந்ததும், ஆகிய சம்பவங்களினால் எதிர்பாராத ஓர் பெரிய வெகுமானத்தை அடைந்து மகிழ்கின்றேன். அதாவது தாங்கள் கத்தோலிக்கு வேதத்தில்சேரவிருக்கும் சுபசெய்தியே. ஆனால் என்னைத் தாங்கள் கலியாணம் செய்துகொள்ளக் கோருகிறீர்கள்போலும். அந்தோ! அதற்கு நான் என்னத்தைச் சொல்லப்போகிறேன். எனக்கு இவ்விஷயம் மெத்த கஸ்தியை உண்டுபண்ணுகிறது. நான் அதற்குத் தகுந்தவளுமல்ல, யோக்கிதையுடையவளுமல்ல, உயர்குலத்தாளுமல்ல— ஆனால் முற்றும் அபாத்திரமானவளே. தாங்களிருக்கும் அந்தஸ்திற்கும் நானிருக்கும் கேவல ஸ்திதிக்கும் எவ்வளவோ வித்தியாசமிருக்கிறது. நானோ யாருமற்ற அநாதை. எனது தாய் தகப்பனார் யாரென்றும், எனது பிறப்பு முதலியவை இப்படிப்பட்டவை என்றும் எனக்குத் தெரியாது. நான் எந்தக் குடும்பத்தைச் சார்ந்தவளோ? ஆகையினாலே நான் எப்படித் தங்களைக் கலியாணம் செய்துகொள்ளுகிறது? அப்படி நான் செய்துகொண்டால் தங்களுடைய மேலான குடும்பத்துக்குக் கெடுதியையும் பங்கத்தையும் உண்டுபண்ணும் பெரும்பாதகியாவேனன்றோ?" என்று பேச்சை முடிக்குமுன்னரே, இவை யாவற்றையும் கவனமாகக் கேட்டுக்கொண்டிருந்த மற்ற மூவரும் ஒரே சப்தத்துடனும் ஒலியுடனும் ஏககாலத்தில் "அம்மா நீர் ஒருகாலும் அநாதையாகமாட்டீர், அஞ்சவேண்டாம்," என்று ஒரே வாய்ப்படச் சொன்னார்கள்.

அதற்கு அப்பெண்மணி சாந்தமாகச் சொல்லலுற்றாள்: "எனது அரிய நண்பர்களே! நான் அநாதைதான்; என் விருத்தாந்தத்தை நீங்கள் அறிவீர்களாகில் என் சொல்லை மறுத்துப் பேசமாட்டீர்கள். அதை நான் இதோ எண்பிக்கிறேன். நான் பிறந்த சில நிமிஷத்திற்குப் பிறகு மாட்டுக்கொட்டிலிலிருந்து கண்டெடுக்கப்பட்டேன். எனது தாய் தந்தையர் யாரென்றும் எனக்குத் தெரியாது. ஆனால் என்னை வளர்த்தவர்களைமட்டும் தெரியுமேயன்றி மற்ற சங்கதி எனக்கு யாதொன்றும் தெரியா" தென்று இப்பெண்மணி சொன்னாள்.

வாலிபனின் தாயார் பெண்ணைப் பார்த்து "அம்மணி! உனது பெயரென்ன?" வென்று கேட்க,

"ஜெயசீலி" என்று விடையளித்தாள் அந்நங்கை.

இதன்பின்பு வாலிபனின் தாயார் சற்று நிதானித்து மறுபடியும் அப்பெண்ணைப் பார்த்து "கண்மணி! உன்னுடைய முழங்கையில் ஏதாவது சதை வளர்ந்திருக்கிறதா" வென "ஆம்! வளர்ந்திருக்கிறது, இதோ! நீங்களே பார்த்துக் கொள்ளுங்கள்" என்று காண்பித்தாள்.

"சரி ஆனால், உனது வலது காலின் விரல்களில் ஒன்று குறைகிறதா?" வென்றுங் கேட்டாள்.

அப்போது இவள் "ஆம் அதுவுமுண்டு, இதோ! காண்பிக்கிறேன் பாருங்கள்" என்று சொல்லிக் காண்பித்ததன்றியே "இவையெல்லாம் உங்களுக்கு எப்படித்தெரியு" மென்று அதிசயத்துடனும் பிரமிப்புடனும் அப்பெண்மணி கேட்கவே, இளைஞனின் தாயார்,

'ஆ! ஆ!! சில வருடங்களுக்குமுன் காணாமற்போன என் கண்மணிமகள் இவளே" என்று அந்தப் பெண்ணைக் கட்டிக்கொண்டு அரவணைத்துச் சந்தோஷ மிகுதியினால் கதறி யானந்த பாஷ்பம் பெருக்கினாள்.

'எங்களுடைய தங்கை' என்று மகனும் மகளும் ஆனந்தப் பரவசத்தராகி அலறினார்கள், ஆர்ப்பரித்தார்கள். அன்று அவ்வில்லம், கார் பெற்ற தோகைபோலும், கண்பெற்ற வாண்முகம்போலும் அகமகிழ்ச்சியினால் அலர்ந்து மலர்ந்து ஒளிர்ந்தது.

இப்படி இவர்கள் செய்தது யாவும் ஜெயசீலிக்குப் பிரமிப்பைக்கொடுத்தது. "இந்தப் புண்யவதி என்னுடைய முழங்கையிலும் காலிலுமுள்ள அடையாளங்களை எப்படி அச்சுப்புள்ளியைப்போல் அவ்வளவு சரியாகச் சொன்னா" ளென்று அதிசயப்பட்டாள். தான் பிராமணத்தி மகளென்று தெரிந்த பின்னர் உள்ளம் சற்று குளிர்ந்தது. அந்த அம்மாள் வாலிபனைப் பார்த்து "நீலகண்டா" வென்று அழைத்து, வீட்டுக்குப்போய் உனது தகப்பனார் இறப்பதற்குமுன்னர் ஜெயசீலிக்குக் கொடுக்கும்படியாக எழுதி வைத்திருந்த ஒரு சிறிய காகிதக் கட்டை உடனே எடுத்துக்கொண்டுவா" என்று கட்டளையிட்டாள்.

நீலகண்டனும் துரிதமாக வீட்டுக்கு ஓடிச் சென்று, அரக்கால் முத்திரையிடப்பட்டிருந்த ஒரு கடிதக் கட்டை எடுத்துக்கொண்டுவந்து கொடுத்தான். அதன் முகப்பிலெழுதியிருந்ததாவது "இந்தக் கடிதத்தை எனது புத்திரியாகிய ஜெயசீலிக்குக் கொடுக்கவும். அவள் என்னாலும் எனது பத்தினியாலும் அதிக கஷ்டமான சமயத்திலே கைவிடப்பட்டாள். பிள்ளைக்கு முழங்கையிலே சதை வளர்ந்திருக்கும், வலது கால் விரலொன்றில்லாமலிருக்கும். இந்தக் குறிகளை நானும் எனது மனைவியும் குழந்தை பிறந்த போதே கவனித்தோம்" என்பதே. பின்னர் முத்திரைபோட்டு அரக்குச் சீல் வைத்திருந்த அக்கடிதத்தை ஜெயசீலி திறந்துபார்க்க அதில் பின்வருமாறு எழுதப்பட்டிருந்தது:—

'எனது பிரியமுள்ள குமாரத்தியே, வாழ்க! நீடூழி வாழ்க! சகல சம்பத்தையும் சர்வேசுரன் உனக்களித்து உன்னை யாசீர்வதிப்பாராக!

என்னிருகண்மணி மகளே, நான் உன்னை நேரிற் காணவும், கண்டு உன்னுடன் சம்பாஷித்து, உனக்கு சில சங்கதிகளைச் சொல்லவும் ஆசையாயிருந்தேன். அந்தப் பாக்கியத்துக்குக் கொடுத்துவைக்காத பாவியானேன். நான் உனக்குச்சொல்ல விரும்பியது பின்வருமாறு:

உனது தாயாரும் நானும் ஜாதியில் பிராமணர். நாங்களிருவரும் மனந்திரும்பி இரகசியமாக கத்தோலிக்கு வேதத்தில் உட்பட்டோம். பின்னர் ஓர் குருவானவரால் அந்தரங்கமாய்க் கலியாணம் செய்துகொண்டோம். நீ பிறந்த போது இந்த இரகசியத்தை காப்பாற்றவேண்டியவர்களாகவிருந்தோம். ஆகையினாலே நாங்களுன்னை நிராதரவாய்க் குளிர் அதிகமாக இருக்கும் மாதமாகிய டிசம்பர் மாதத்தில் ஓர் நாள் காலையில் ஓர் மாட்டுக்கொட்டிலிலே யாவருக்குந் தெரியாமல் வைத்துவிட்டுப் போகும்படி நேர்ந்தது. ஆனால் உனக்குப் போதுமான பணமும் உன்னுடன வைத்துச் சென்றோம். எங்களுடைய உயிர் அச்சமயத்தில் ஆபத்திலிருந்ததினால் நாங்களிருவரும் ஒருவரைவிட்டு ஒருவர் சில வருஷம் பிரியவும் நேரிட்டது. ஆதலால் சில வருஷங்கள் வரையில், நாங்கள் அபூர்வமாய் ஒருவரை யொருவர் காணக்கூடுமாயிற்று. அந்தக் காலமெல்லாம் நாங்கள் பிராமணர்களென்றே நடித்துவந்தோம். ஆயினும் நான் மட்டும் உன்பேரில் சிந்தையாகவிருந்து எவ்விடத்திலிருக்கிறாயென்று அடிக்கடி விசாரித்து, உளவறிந்து, நீ பிறந்த ஊரின விசாரணை குருவானவரால் ஞானஸ்நானம் கொடுக்கப்பட்டு, ஜெயசீலி என்ற பெயரிடப்பட்டு, துரைசாமி ஐயருக்கும் அவரது பத்தினி சுந்தரம்மாளுக்கும் ஞானப்பிள்ளையாக இருந்து அவர்களால் போஷிக்கப்பட்டுவருகிறாயென்று அந்தரங்க நண்பர்களைக்கொண்டு அப்போதைக்கப்போது அறிந்துகொண்டுவந்தேன். உன்னை நான் சிசுப் பிராயத்திலிருந்து குழந்தைப்பருவம் வரைக்கும் காப்பாற்றினேன். உனக்கு உதவியும் செய்தேன். உனக்குக் கடிதம் கைக்குக் கிடைக்கும்போது, உனது தாயார்மட்டும் உயிரோடு இருப்பார்களேயாகில் நாங்கள் எங்களுடைய ஜீவிய நாட்களிலே பட்ட கஷ்டத்தைப்பற்றி விபரமாகச் சொல்லுவார்கள். ஆனால் உனக்கு பத்தா

யிரம் ரூபாய் ஆஸ்திவைத்துப் போகிறேன். எனது பிரிய மகளே! நீ திருப்தியாயிரு. நான் நல்ல கிறீஸ்துவனாக பாக்கியமான மரணத்தை அடைகிறேன். எனது கோரிக்கை யாதெனில், கடவுள் உன்னையும், உன் தாயாராகிய எனது பெண்சாதி, உன் சகோதரன் சகோதரியாகிய என் மகன், மகள் நால்வரையும் ஒன்றாகச் சேர்த்து, நீங்கள் யாவரும் நல்ல கிறீஸ்துவர்களாக ஒழுகி நன்மரணத்தை அடையச்செய்ய வேண்டுமென்பதே. கடைசியாய்ப் பேரின்ப மோட்ச இராஜ்ஜியத்தில், உங்கள் யாவரையும் காண ஆசிக்கும்;

உனது பக்ஷமுள்ள தந்தை,

புருஷோத்தமன்.

என்று கையொப்பமிட்ட கடிதத்தை உரக்க வாசித்து, இரு கண்களினின்றும் பேராறுபோல் நீர் பெருகச் சந்தோஷமும் கஸ்தியுமடைந்தாள். அவ்வாறே அங்குள்ள யாவரும் அவளோடு கலங்கியழுது கண்ணீர் உகுத்தனர். என் சந்தோஷமெனில், சில வருஷகாலமாக தனது தாய் தந்தையர் யாரென்று இவளுக்குத் தெரியாமலிருந்து கடைசியாகப் பெற்றோரைக் கண்டுகொண்ட பாக்கியமும், சகோதரர் சகோதரியையுங் காணப்பெற்ற பாக்கியமும் அடைந்ததினாலேதான். என் கஸ்தியென்றால், இவள் தனது தகப்பனாரைக் கண்டு களிக்கக் கொடுத்துவைக்கவில்லை யென்பதினாலேயே. இவளது தாயார் நடந்த காரியங்கள் யாவற்றையும் ஆதியோடந்தமாகச் சொன்னார்கள். அதன்பின்னர் ஜெயசீலி தனது சகோதரனைப் பார்த்து, "என் நேச சகோதரமே, நீர் எனக்குச் சொந்தம் நானும் உமக்குச் சொந்தம். நான் உமது சகோதரியும் நீர் எனது சகோதரனுமாயிருக்கிறதினாலே இனி நீர் என்னைக் கலியாணம் செய்துகொள்வது தகாது என்று நான் சொல்லத்தேவையில்லை" எனப் பகர்ந்தாள். (சகோதரி இவ்வார்த்தைகளைச் சொல்லும்போது நீலகண்டன் வெட்கத்தினால் தலையைக் குனிந்துகொண்டு தரையை நோக்கினவண்ணமாக இருந்தான்.) "மேலும் இந்த பத்தாயிர ரூபாய் ஆஸ்தியும் எனக்கு மிகச் சொற்ப ஆஸ்தியே; இது எனக்குத் தேவையில்லை. எனது பொக்கிஷம் சேசுநாதருடைய திரு இருதயமேயன்றி வேறொன்றுமல்ல. இந்த ரூபாய் பத்தாயிரத்தில் பாதி நான் படித்துவந்த கன்னியாஸ்திரி மடத்திற்குக் கொடுக்கவேண்டியது கிரமம். ஏனெனில், அவர்கள்தான் என்னைக் கண்திறந்துவிட்டவர்கள். மற்றப் பாதிப் பணத்தைத் துரைசாமி ஐயருக்குக் கொடுக்க வேண்டியது. அவரால்தான் நான் ஐந்து பிராயம் வரைக்கும் போஷிக்கப்பட்டுக் காப்பாற்றப்பட்டு வந்தேன். பெற்ற தாய் தந்தையர்கள் என்னைக் கைவிட்டகாலத்தில் அவர்களே எனக்கு உற்ற தாய் தந்தையராயிருந்து, சகல ஊழியமும் செய்து என்னை ஆளாக்கிவிட்டார்கள். ஆகையினாலே நான் அவர்களை ஒருபோதும் மறந்து விடக்கூடாது.

"நன்றி மறப்பது நன்றன்று நன்றல்ல
தன்றே மறப்பது நன்று"

என்பது மூதுரை. மேலும் "உப்பிட்டவர்களை உள்ளளவும் நினை" எனவுஞ் சொல்லப்பட்டிருக்கின்றதே. இந்தப் பணம் விசேஷமாக துரைசாமி ஐயரின் ஏக குமாரத்தியாகிய மங்களமரிக்கு ஓர் தகுந்த சீதனமாக உதவும். அவள் எப்பொழுதும் என்னுடைய நல்ல சிநேகிதியாக இருந்தாள். அவள் எப்பொழுதும் என் விஷயத்தில் முகமலர்ச்சியுள்ளவளாகவும் பக்ஷம், பக்தி கீழ்ப்படிதலுள்ளவளாகவும் நடந்துவந்தா" ளென்று ஜெயசீலி சொல்லிமுடித்தாள்.

(இன்னும் வரும்.)

CORRESPONDENCE.
கடிதங்கள்.

[கடிதக்காரர் அபிப்பிராயங்களுக்குப் பத்திராதிபர் உத்தரவாதியல்லர் ப—ர்.]

ஓர் வியஸனத்திற்குரிய மாற்றம்.

திருச்சி மேற்றிராசனத்தைச் சேர்ந்த கடுக்காக்காட்டில் சென்ற 11-வருஷகாலமாக ஞான அரசாங்கஞ் செலுத்தி காரிருள் என்னப்பட்ட பாவாந்தகாரத்தால் பீடிக்கப்பட்டிருந்த கிறீஸ்துவர்களைத் தமது சுய கிரணங்களின் ஞான சொற்களால் பிரகாசிப்பித்தும், இந்த பதினொரு வருஷத்துள் தேவாலயம், கன்னியர் மடம், சத்திர முதலிய பல கட்டிடங்களைக் கட்டுவித்தும், பங்கு கிறீஸ்துவப் பிள்ளைகள் ஞானோபதேசத்திலுங் கல்வியிலும் தேர்ச்சியடையவேண்டுமென்ற நோக்கமாய்ப் பல ஸ்கூல்களைத் தமது கைப்பொருள் உதவியால் நியமித்துத் தகுந்த உபாத்திமார்களை ஏற்படுத்தியும், வறியோர்களுக்கு வற்றாக் கருணை சமுத்திரமாகிய அண்ணலும், பாதுகாவ

லும், அரிய ஞானத்தந்தையுமாய் அமையாநின்ற சங்கைக்குரிய மரிய செல்வநாத சுவாமியவர்கள் இவ்விந்தியாவிலிருந்து மெசொப்பொட்டேமியாவுக்கு அனுப்பப்பட்டிருக்கும் தமிழ் பட்டாளங்களுக்கு கவர்ன்மெண்டின் வேண்டுகோளின்படி ஆத்தும குருவாகவும், ஞானத்தந்தையாகவும் நியமிக்கப்பட்டு, 1918-ம் வருஷம் அக்டோபர் மாதம் 6-ம் தேதியன்று திருச்சியைவிட்டு யுத்த களத்துக்குப் பிரயாணமாயினார்கள்.

இவ்வரிய தந்தை ஏழைகளுக்குச் சகாயமாகவும், அநாத பிள்ளைகளுக்கு ஆறுதலாகவும் லூர்துநாயகி பெயரால் ஓர் கோவிலும், ஆஸ்பத்திரியும் கட்டவேண்டுமென்ற எண்ணத்துடன் அவைகளுக்கு வேண்டிய நிலங்களை வாங்கி கட்டிடங்கள் துவக்குஞ் சமயமாயிருக்கையில் திடீரென்று போய்விட்டனர்.

ஆனதால் இதைக் கண்ணுறும் நேயர்களே, இந்த ஞானத்தந்தையானவர் யுத்தகளத்தில் யாதொரு பொல்லாப்புமின்றி, தமது கடமைகளை சரியாய் நிறைவேற்றி, இவ்விந்தியாவிற்கு சீக்கிரத்திற் திரும்பி, ஷேமமாகத் தானே வந்து, அவர் கோரியிருக்கும் காரியங்களை செவ்வையாய் முடிக்கும்படியாய் கருணாம்பரக் கடவுள் கிருபை செய்ய, தங்கள் அநுதின ஜெபத்தில் வேண்டிக் கொள்ளும்படி மிகுந்த விநயமாய்க் கேட்டுப் பிரார்த்திக்கும்,

கடுக்காக்காடு, 8—10—1918. ஓர் அநுதாபி.

தூத்துக்குடி.

பரத பாலிய சங்கத்தின் அங்கத்தினரில் ஒருவராகிய ஸ்ரீமான் ஜோசப் கோமஸ் அவர்கள், நமது பரத நாடெங்கும் புதிதாய் உற்பத்தியாகி, வெகு துயர்கொடுக்கும் இன்புளூயென்சா (Influenza) வெனும் ஜுரத்தால் பண்டாரவேளை யெனும் ஊரில் 27-9-18ல் இறந்த சேதியை இதன மூலமாய் அறிவிக்கிறேன்.

இவருடைய 25-ம் பிராயத்தில் தமது மாதாவையும், சகோதர பந்து மித்திரர்களையும், ஜென்ம தேசமாகிய இவ்வூரில் நின்று பரிதபிக்க விட்டு, தமது உத்தியோகத்திற்காகச் சென்ற அன்னிய தேசத்தில் மரணமானது மகா துயரத்திற்குரியது. இதை யறிந்த பரத பாலிய சங்கத்து அங்கத்தினர் யாவரும் ஒருங்குகூடி அவருடைய மரணத்திற்காக வெகு கஸ்திபடைந்ததோடு, அவருடைய உற்றாருக்கு சங்கத்தின் அநுதாபத்தை அறிவிக்கவேண்டுமென்று கனம் காரியதரிசி அகுஸ்தீன் பர்னாந்து அவர்களால் கொண்டுவரப்பட்ட தீர்மானம் எல்லாராலும் வெகு ஆசாரத்துடன் ஆமோதிக்கப்பட்டு, சங்கத்தின் பேரால் 16-10-18ல் சந்தமரி தஸ் நேவிஸ்தாயின் திவ்ய ஆலயத்தில் ரெக்குயெம்பூசை செய்யப்பட்டது. அந்தப் பலிபூசை கண்டு அங்கத்தினர் திவ்யநற்கருணை உட்கொண்டு அவ்வாத்தும இளைப்பாற்றிக்காக ஒப்புக்கொடுத்தார்கள்.

இங்ஙனம்,

பரத பாலிய சங்கத்தின் அங்கத்தினரில் ஒருவனும் ஸ்ரீமான் கோமஸ் அவர்களின் ஆப்த நண்பர்களில் ஒருவனுமாகிய,

16—10—18. ஜே. பிச்சை றெட்றிகஸ்.

முன் னெச்சரிக்கை.

சங்கைக்குரிய பத்திராதிபரே!

தஞ்சையிலுள்ள கரந்தை கிராம முனிசீப்பு, மிஸ்டர் T. A. பொன்னுசாமி பிள்ளை யென்பார் வெளியாக்கியுள்ள புத்தகங்களில் சில இவ்விடங்களில் விற்பனைக்கு ஊசலாடுகின்றன. அவற்றிலடங்கிய ஆபாச விஷயங்களோ உத்தம கத்தோலிக்குக் கிறீஸ்துவர்களின் மனதைப் புண்படுத்தாமற்போகா. மேலும் புண்படுத்துவதோடு மாத்திரம் போகாமல், அவை கத்தோலிக்கு வேத ஆசார நுட்பங்களையும், அவற்றின் மேலான கருத்துக்களையும் அறியாத அநுபோகமற்ற யௌவனர் கையில் அகப்படுமானல், அத்தகையோர்களை லுத்தேரைப்போல் சமயப்பிரஷ்டராக்கிவிடும் என்பது திண்ணம். ஆனதால், அப்புத்தகங்களை இலவசமாக ஈந்தாலுமே, எம் கத்தோலிக்குச் சகோதரர்கள் அவற்றைத் தீண்டாதொழியுமாறு, அவற்றின் சாராம்சத்தை இக்கடிதமூலமாய் எடுத்துக்காட்டத் துணிந்தேன். இதைத் தங்கள் பத்திரிகையினோர் கோணத்தில் பிரசுரிக்கத் தயைபாலிக்கும்படி வேண்டுகின்றேன்.

"நாகரீகமாலை," "மெய்விவாகக் கண்ணுடி" என்னும் மேற்படியார் புத்தகங்கள் இரண்டு எனது கைக் கெட்ட, அவற்றைக் கண்ணேட்டமிட்டதில், அப்புத்தகங்களின் நூலாசிரியருடைய கல்விச் சாதுரியம் கார்முகிலுக்கொப்பக் காணப்பட்டதால், அவர்பால் மௌனஞ்சாதிக்க விடந்தரவில்லை. அந்தோ! "நாகரீகமாலை" "மெய்விவாகக் கண்ணுடி" யெனச் சிறந்த நாமங்களை அப்புத்தகங்களுக்குச் சூட்டி,

அந்நாமங்களை அனுசாரப்படுத்தும் விஷயங்களை அவற்றினுள் மாட்டி, அதனோடே குரு நிந்தையைக் கூட்டி, தாம் கொண்டுள்ள ஆங்காரமென்னும் மூளை மழுங்கிய ஆணியை வைர மரமென சிறந்தோங்கும் சத்திய மறைமீது திணிக்கத் துணிந்து, ஷை புத்தகங்களை அச்சடித்து வெளியாக்கியுள்ளார்.

பக்த சிரோமணிகளாகிய எனதன்பார்ந்த கத்தோலிக்கு நண்பர்களே! எச்சரிக்கை; வெளிக்குத் தெளிந்த நீரைக் காட்டி உள்ளுக்குள் ஊத்தைகளை அடக்கிக்கொண்டிருக்கும் கவலைக் கிணற்றுக்கொப்பான அப்புத்தகங்கள், சத்திய விசுவாசங்கொண்ட கத்தோலிக்கு விசுவாசிகளைச் சீர்திருத்த, அதிப்பிராயாசையுடன் வெளியாக்கப்பட்டனவென ஷை நூலாசிரியர் எடுத்துக் கூறுவது, விந்தையிலும் விந்தை! நிந்தையிலு நிந்தையே! ஐயோ! பாபம்!! இவர் ஓர் முனிசீபபாயிருந்துகொண்டு, சர்க்காருக்கு உத்தரவாதமான வேலையின் பல கவலைகளோடு பரோபகாரமான இந்தச் சீர்த்திருத்த வேலையிலும் சிரசை மாட்டிக்கொண்டார். அதிலும், ஆயிரத்துத் தொளாயிரமாண்டாகப் பல வரசராலும் போற்றப்பட்டு, பங்கமின்றி பரவிவரும் ஞான வாளுகையின் கிரமத்திலும் சீர்திருத்தஞ்செய்ய முயற்சிக்கலானார். முற்றும் முயன்றபின், "முயற்கொம்பாய் முடிந்ததே நமபாடு" மென்று ஏங்கிப் புலம்புவார்போலும்!

நித்திய நாதனிழைத்த சத்திய மறையின் பக்திநிறைந்த தூய ஆசாரங்களைத் துவேஷித்து, அநாகரீகமான வாக்கியங்களை யடுக்கி, விபரீதமான கருத்துக்களை நிரப்பி, அவற்றிற்குச் சற்றுஞ் சங்கோசமின்றி "நாகரீகமாலை" யெனப் பெயருமிட்டு அவற்றைப் புத்தகங்களாக அச்சுமடித்து, வெளியாக்கிய நூலாசிரியரின் கல்வித்திறமை எப்பேர் பெற்றதென்று தென்னிந்தியா தெரிந்துகொள்ளாமற் போகாது.

"செல்வம் வந்துற்றப்போது
தெய்வமுஞ் சிறிதுபேணார்
சொல்வதை யறிந்துசொல்லார்
சுற்றமுந் துணையும்பாரார்
வெல்வதே கருமமல்லால்
வெம்பகை வலியதென்றெண்ணார்
வல்வினை வினையும் பாரார் இந்த
மண்ணின்மேல் வாழு மாந்தர்"

என்னும் உண்மைக் கவிக்கொப்பச் செல்வச் செருக்காலோ, காய்மகாரப் பெருக்காலோ தாம் எழுதப்புகுந்தது யாதெனவெண்ணாது, வாய்க்கு வந்தமட்டும் வரைந்துவிட்டார். ஐயோ! யுகாந்த காலத்தி லுதிக்கப்போகும் அந்திக் கிறீஸ்துவுக்கு முன்னோடியாகவிருக்க ஆசித்தோ இவ்வாறு வேத வேதியரைத் தூஷிக்கப் புகுந்தார்?

முள்ளிலுதைப்பது கடினமாமென முதலோன் மொழிந்த வாக்கியத்தைச் சிந்தையிலிருத்தி சித்தந்தெளிவாராக.

ஐயோ! தலையிலடிபட்ட நச்சுநாகம் கடு நஞ்சைக் கக்குமாப்போல, ஞானாதிகாரிகளால் ஞாயமாய் அடிக்கப்பட்டு, பலவித தூஷணங்களைச் சத்திய வேத போதகர்கள்மீது கக்கத் துணிந்தபின், தாமோர் கத்தோலிக்கபிமானியெனவும், இந்திய பரம எழைக் கிறீஸ்துவக் குழந்தைகள் கண்ணியம்பெற மனமுருகி, வழிகாட்டும் சீர்திருத்தத் தலைவரெனவும் கழறுகிறபது என்ன நயவஞ்சகமோ? "ஆடு நனைகிறதென்று ஓநாய் குந்தி யழுமா" ப்போல, கிறீஸ்துவர்களின ஞான வடிமைத்தனம். நீங்கப் பேரொலியிட்டு அழுகிறார்போலும்.

"நீ இராயா யிருக்கிறாய்; இந்த இராயினமேல என் திருச்சபையைக் கட்டுவேன். நரகத்தின வாசல்கள் அதை மேறகொள்ளமாட்டா" என்று திவ்ய இரக்ஷக பெருமானாகிய யேசுநாதசுவாமி திருவாய்மலர்ந்து வசனித்த வாக்கியத்தைச் சிரமேற்கொண்டு, ஞானாதிகாரத்திற்குக் கீழ்ப்பட்டு நலவழி நடந்து, அதன பயனாகிய நித்திய மோட்சானந்த பாக்கியத்துக்குப் பங்காளியாகப் பிரயாசைப்படுவாராக! அவா அவ்வாறு மனந்திரும்புமபடி நாமனைவரும அவருக்காக எல்லாம்வல்ல ஈசன திருவருளைச் சிந்தித்து மன்றாடுவோமாக! இஃதனறியும் உத்தமகுண கத்தோலிக்குச் சகோதரரே! வேத தூஷணமும், குரு நிந்தையும் செறிந்துகிடக்கும் அப்புத்தகங்களை வாங்கி வீட்டில் வைப்பதானது, வீரவேங்கையை விலைக்கு வாங்கி வீதியில் விட்ட வினைக்கொப்பாகுமென்றெண்ணி யெச்சரிக்கையாயிருப்பீர்களாக! அப்புத்தகங்களில் யாதாவதொன்று நமது கைக்கு எட்டுமானால் அதை உடனே சின்னாபின்னமாயக் கிழித்து, அக்கினிக்கு இரையாக்குவதே உத்தம காரியமென அறியக்கடவோமாக.

பெங்களூர், 1—10—18.

இங்ஙனம்,
கத்தோலிக்கு இந்தியன்.

[இடமில்லாக் குறையால் இன்னுஞ் சில கடிதங்கள் பிரசுரிக்கப்படவில்லை. கடிதமெழுதுவோர் காகிதத்தின் இடது புறத்தில மூன்று விரற்கடை யிடமிட்டு திருத்தமாயும் விஷயங்களைச் சுருக்கமாயும் எழுதுவார்களாக. ப—ர்.]

MISCELLANEOUS NEWS & NOTES
பற்பல சமாச்சாரம்.

பார்லிமேன்டில் ஸ்திரீ மேம்பர்கள்.—பிரிடிஷ் பார்லிமென்ட் மகா சபையில், ஸ்திரிகளும் மெம்பர்களாக ஏற்றுக்கொள்ளப்பட ஓர் சட்டம் உடனே ஏற்படுத்த வேண்டுமென்று, காமன்ஸ் மகா சபையில் ஒரு தீர்மானம் 25-பேர் விரோதமாய் நிற்க, 274-பேர்களால் அங்கீகரிக்கப்பட்டு விட்டது. நெடுநாள் வாது வழக்கிட்டு வந்த பெண்கள் கட்சி கூடிய சீக்கிரத்தில் கைகூடப்போகிறது.

பார்சல் தபால்கள்.—பார்சல் தபால்கள் இப்போது அபாரமாய்க் குவிந்து, பொது வாய்த் தபால் வேலைக்கு அசௌகரியத்தை உண்டுபண்ணுவதால், அதை ஒருவாறு குறைக்கும் நோக்கத்துடன், கவர்ண்மென்டார் நவம்பர்மீ முதல் தேதிமுதல், பார்சல்களுக்குச் செலுத்தவேண்டிய கட்டணத்தை பின்வருமாறு அதிகப்படுத்தியிருக்கிறார்கள். இருபது தோலாவுக்குக் குறையாத எடையுள்ள பார்சலுக்கு அணா 2. இருபதுக்குமேல் 800-க்குக் குறையாத தோலா எடையுள்ள பார்சலுக்கு பிரதி 40-தோலாவுக்கும், அதற்கு மேற்பட்ட சில்லறை தோலாக்களுக்கும் முறையே அணா 4.

ஓர் தற்கொலை—மஞ்சகுப்பம் தாலுக்கா, குறிஞ்சிபாடி என்னும் கிராமத்தில், ஓர் குடியானவன் வீட்டில், தற்போது ஊரெங்கும் பிரவர்த்திக்கும் கபவாத ஜுரத்தால் ஒருவர் ஒருவராய் ஒருவன் தவிர மற்றெல்லோரும் இறந்துபோக, கடைசியாய் நின்ற ஒருவனும் தற்கொலை புரிந்துகொண்டு செத்தானாம். என்னே மதியீனம்! "அரிது அரிது மானிடராதல் அரிது" என்பதற்கொப்ப அரிய மானுட ஜென்மத்தை அடைந்து, அதை அவலமாய்ப் போக்கடித்து, ஊழியுள்ளகாலம் அவியா அக்கினியில் வேகப்போகும் மதிகெட்ட மானிடரை யென்னென்று சொல்வது?

உலகில் பெரிய மெழுகுவர்த்தி.—இத்தாலியாநாட்டில் சமீபத்தில் அநியாயமாய்க் குற்றஞ்சாட்டப்பட்ட ஒரு கைதி தன் குற்றமற்ற தன்மை ருசுவாகி தான் விடுதலையடையும்பட்சத்தில், பெரியமெழுகுவர்த்தி யொன்று செய்வித்து, அதைக் கோவிலுக்குக் காணிக்கையாகக் கொடுப்பேனென்று பொருத்தனை செய்துகொண்டான். அவனுடைய மன்றாட்டு கேட்கப்படவே, நேர்ந்துகொண்டபடி செய்தான். அப்படிச் செய்யப்பட்ட மெழுகுவர்த்தியின் உயரம் 10-அடி, கனம் 8-அங்குலம். விலை ரூ 1,500. அதை இராப்பகலாய் எரியவிட்டால் இரண்டரை வருஷம் எரியுமாம்.

வெகுமதி பெற்ற மாதராள்—"பெண் கல்வி" என்னும் விஷயத்தைப்பற்றி நல்லதோர் வியாசம் எழுதும் பெண்ணுக்குக் கொடுப்பதாக மதுரை, பால்ய நாடார் சங்கத்தார் பிரசுரித்திருந்த வெகுமதிகளில் முதல் வெகுமதியை, சென்னைக்கடுத்த புழலேரியிலிருக்கும், காலஞ்சென்ற பாடிகார்ட் அந்தோனிமுத்துப் பிள்ளை பேத்தியாகிய மிஸ். செல்வமணி அமலதாஸ் என்னும் மாதராள் அடைந்ததாகவறிந்து சந்தோஷப்படுகிறோம். இம்மாதராள் எழுதிய வியாசம் சீக்கிரத்தில் புத்தகரூபமாய் வெளிவருமெனச் சொல்லப்படுகிறது. இவ்வாறு நமது பெண்கள் அதிகமதிகமாய்ப் படித்து முன்னுக்குவந்தால்தான் நமது கத்தோலிக்கு இந்தியருக்கு ஈடேற்றமுண்டு.

"பிரான்ச்சிஸ் கமிட்டி"—இந்தியா காரியதரிசியாகிய மிஸ்டர் மாண்டேகும், இந்தியா ராஜப்பிரதிநிதியாகிய செம்ஸ்போர்டு பிரபுவும் கூடிச்செய்து பிரசுரித்துள்ள இந்திய இராஜாங்க சீர்திருத்தங்கள் விஷயமாய், இராஜாங்கத்துக்குப் பிரதிநிதிகளைத் தெரிந்துகொள்ளும் சுதந்தரம் யார் யாருக்குக் கொடுக்கப்படலாகுமென்றுவிசாரணைசெய்து அறிவிக்கும்படி நியமிக்கப்பட்ட கமிட்டியே "பிரான்ச்சிஸ் கமிட்டி" யென்னப்படுவது. இக்கமிட்டியார் அடுத்த ஜனவரிமீ சென்னைக்குவந்து விசாரணை செய்யப்போகிறார்களெனத் தெரியவருகிறது. இவர்களுக்கு வேண்டுமான விஷயங்களை சேகரித்து சித்தப்படுத்தும்படி, லோக்கல் அன்டு முனிசிபல் டிப்பார்ட்டுமெண்டு அண்டர் செக்ரட்டெரியாகிய மிஸ்டர் வி. கே. கிருஷ்ணமாச்சாரி யென்பவரை நியமித்திருக்கிறார்கள்.

சாவுக்கஞ்சாத தீரன்.—சமீபத்தில் வட கடலில் பிரயாணஞ் செய்துவந்த ஒரு நீராவி மரக்கலமானது, ஜெர்மன் ஜலக்கீழ் கப்பலின் வெடிகுண்டினுல் தாக்கி உடைபட்டபோது, என்ஜின் அறையில் வேலை செய்துகொண்டிருந்த ஐந்தாறு வேலையாட்கள் நீராவியால் சூழப்பட்டு வெந்து சாகிறதாயிருந்தார்கள். அந்த ஆபத்தான சமயத்தில், தன்னுயிரைத் திரணமாகப் பாவித்த ஒரு வாலிபன், "காலகர்" என்னும் பெயரினேன், உடனே அந்த அறைக்குள் தீரமாய் நுழைந்து, மூன்றுவிசை நுழைந்து மகா பிரயாசையுடன் மூன்று பேரை வெளியே கொண்டு வந்து காப்பாற்றினுன். நாலாவது விசையுள்ளே சென்ற வாலன் திரும்பிவரவேயில்லை. நீராவியினுல் மாண்டான். பரிதாபம்! தான் உள்ளே சென்றால், தன்னுயிருக்கு ஆபத்து என்று ஸ்பஷ்டமாய்த் தெரிந்திருந்தும், பிறவுயிரைக் காப்பாற்றத் துணிந்த இவனல்லோ, சரியான பரோபகாரி!

காய்ச்சல். — இன்புளுவென்சாவென்னும் கபவாத ஜுரமானது இப்போது சாதாரணமாய் இந்தியா முழுமையிலும் பரவி ஜனங்களுக்குத் துன்பத்தை விளைவித்துவருகிறதென்றாலும், விசேஷமாய் கல்கத்தா, பொம்பாய்போன்ற ஜன நெருக்கமுள்ள பட்டணங்களில் அதிகசேதத்தை விளைவிக்கின்றது. இந்தத் தென்னிந்தியாவின் தலைநகரமாயுள்ள சென்னப்பட்டணத்திலும் அதிக உயிர்ச்சேதத்தை உண்டு பண்ணுகிறது. அக்டோபர்மீ 19-ம் தேதியோடு முடிவான வாரத்தில் சென்னையில் நேரிட்ட 2,016 மரணங்களில் 1,399 மரணங்கள் ஜுரத்தால் நேர்ந்தனவென்று கணக்கிடப்பட்டிருக்கிறது. அதாவது பிரதிதினம் 186-பேர் காய்ச்சலினுல் சாகிறார்கள். ஆயினும், இது உச்சக்கணக்கென்றும், இனி ஜுரத்தின் உக்கிரம் வரவரத் தணிந்துபோகுமென்றும் சென்னை கார்ப்பொரேஷன் ஹெல்த்தாபீசர் சொல்லுகிறார்.

"பரதபோதினி"—இப்பெயர் பூண்ட புதுப் பத்திரிகையொன்று நமது பார்வைக்கு அனுப்பப்பட்டது. அப்பெயர் குறிக்கிறபடி அப்பத்திரிகை, பாரதகுலாபிமானிகளுக்குரித்தானதாயினும், ஏனையோராலும்பிரயோசனகரமாய் வாசிக்கப்படத்தக்கது. நல்ல தமிழில், தெள்ளிய நடையில் வரையப்பட்டுள்ளது. சத்விஷயங்களைப்பற்றிய வியாசங்களைத் தாங்கி நிற்கின்றது. இப்பத்திரிகையைப் பிறப்பித்த பரோபகாரிகளுக்கு பரதகுலத்தவரேயன்றி, கத்தோலிக்கு இந்தியரின் முன்னேற்றத்தை விரும்பும் ஏனையோரும் நன்றிபாராட்டக்கடவார்களாக. ஏனெனில், ஓர் நாடு, அல்லது வகுப்பு நாகரிகமுற்றதோவென அறியவேண்டுமானால், அதனிடத்து உலவும் சமாசாரப் பத்திரிகைகள் எத்தனையென்று பார்க்கவேண்டும். ஜனங்கள் எவ்வளவுக்கு எவ்வளவு பத்திரிகைகளை பிறப்பிக்கவும், வாசிக்கவும் செய்கிறார்களோ, அவ்வளவுக்கு அவ்வளவு அவர்களை நாகரிகமுற்றவர்களெனக் கருதலாகும். "பரதபோதினி" கனத்துப் பெருத்துப் பலுகிப் பெருகி பல்லாண்டு வாழ்வதாக!

புனர் விவாகம்.—திருச்சபை ஆசாரத்தின்படி திருமணம் முடிக்கப்பெற்ற யாதோர் புருஷனுவது ஸ்திரீயாவது தன்னுடைய மனைவி அல்லது கணவன் உயிரோடிருக்கும் வரையிற் எக்காரணத்தை முன்னிட்டும் மறு கலியாணம் செய்துகொள்ளலாகாது என்பது திருச்சபையொழுங்கு. இவ்வொழுங்கை மீறி நடப்பவர்கள் திருச்சபைக்குப் புறம்பாகிறார்கள் என்பது மாத்திரமல்ல, அத்தகையோர்களுக்கு, இந்தியன் பீனல் கோடின்படி கவர்ண்மென்ட் தண்டனையுமுண்டு. ஓர் கிறீஸ்துவன் தான் கட்டிய கிறீஸ்துவ பெண்சாதி உயிரோடிருக்கையில், இந்துமதத்தைத் தழுவிக்கொண்டு, ஓர் இந்து பெண்ணைக் கட்டிக்கொள்ளுவானானால், அப்படிப்பட்டவன், பிகமிக்காக அதாவது இரு பெண்சாதி கட்டினதற்காக, ஷை சட்டத்தின்படி தண்டிக்கப்படுவான். இம்மாதிரிகேசு ஒன்று சென்னை ஐகோர்ட்டாரால் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. இந்தியன் லா ரிப்போர்ட்ஸ், மதராஸ் சீரிஸ், 30-வது வாலியூம், 550-ம் பக்கம் பார்க்க.

ஓர் கத்தோலிக்குப் புரொபஸர்.—பரோடா மஹாராஜா காலேஜில், புரொபஸராயிருந்த மிஸ்டர் மரியதாஸ் இரத்தின

சாமி (எம். ஏ., பார். அட். லா) என்னுங் கத்தோலிக்கு இந்திய கல்விமான், சென்னை, பச்சையப்பன் காலேஜில் (ஹிஸ்டரி புரொபஸர்) சரித்திர போதகாசிரியராக நியமிக்கப்பட்டிருக்கிறாரெனக் கேள்வியுற்று சந்தோஷமானோம். இவர் இராயபுரம் காலஞ்சென்ற கனம் ஐயாக்கண்ணு இரத்தினசாமி முதலியார் புத்திரரும், சூப்பர்வைசர் ம-ா-ா-ஸ்ரீ தைரியநாத முதலியார் மருகருமாவர். இங்கிலாந்துக்குச் சென்று, கேம்பிரிட்ஜ் சர்வ கலாசாலையில் எம். ஏ. வித்தியாபட்டமும், பாரிஸ்டர் பட்டமும் பெற்று இந்தியாவுக்குத் திரும்பிவந்து, இதுகாறும் தொலைதேசமான பரோடா ராஜ்ஜியத்தில் அலுவலாயிருந்த இவர், இப்போது தமது சொந்த ஊருக்கே வந்துவிட்டது அவருடைய உறவினருக்கேயன்றி, மற்ற கத்தோலிக்கு இந்திய ரனைவருக்கும் சந்தோஷத்தைத் தராமற்போகாது. இவர் இங்கு நல்ல வேலைசெய்து, பேரும் புகழும் அடைவாரெனக் கோருகிறோம்.

பாப்பானவரும் ஜேர்மன் அக்கிரமங்களும்.—இப்போது தோல்வியடைந்து புறங்காட்டி ஓடும் ஜெர்மனியர்கள், போகிற போக்கிலே பிரான்சிலும் பெல்ஜியத்திலுமுள்ள நாடுநகரங்களை நாசஞ்செய்வதும், பெண்டு பிள்ளைகளைத் துராகிர்தஞ் செய்வதுமாகிய அட்டூழியங்களை உடனே நிறுத்திப்போடவேண்டுமென்று, பரிசுத்த பிதாவாகிய பதினைந்தாம் ஆசீர்வாதப்பர் ஜெர்மன் சான்ஸ்லராகிய பேடன் தேசத்து இளவரசருக்கும், பவேரியா தேசத்து பாப்புஸ்தானாதிபதிக்கும் முறையே முறையிட்டு கடிதம் விடுத்திருப்பதாக, உரோமாபுரியில் பிரசுரமாகும் ஓர் பத்திரிகை மூலமாய்த் தெரியவருகிறது. ஜெர்மனியர் தாங்கள் செய்யும் அக்கிரமங்கள் உலகத்தார் கண்ணுக்கு அற்பமாகக்காணும்படி எவ்வளவு சாக்குப்போக்குகளைச் சொன்னாலும், எல்லாரையும் ஒரு கண்ணாய் நோக்கும், பொதுத் தந்தையாகிய நமது பாப்பானவர் அக்கிரமத்தைக் கண்டால் கண்டியாமல் விடுவாரோ? அவர் ஜெர்மனியர் பக்கமிருக்கிறாரென்று அபவாதம்பேசியவர்கள் நாவுக்கு இச்செய்தி யோர் ஆப்பல்லவா?

பாப்பானவர் ஸ்தானாதிபதியின் விஜயம்.—அர்ச். பாப்பானவரின் ஸ்தானாதிபதியாகிய மிகவும் வந்திக்கத்தக்க பயோன்டி பீமசோனி ஆண்டவரவர்கள் அடுத்த டிசம்பர் மீ கர்த்தர் பிறந்த திருநாள் சமீபமாக சென்னைக்கு எழுந்தருள யோசித்திருக்கிறாரென சமாசாரந் தெரிகிறது. இந்த மேன்மைதங்கிய பெரிய குருப்பிரசாதியைத் தக்கவிதமாய் வரவேற்பதற்கு வேண்டிய முஸ்திப்புக்கள் செய்ய, சென்ற மீ 20உ சென்னை, மேரீஸ் ஆலில், கனந்தங்கிய அதிமேற்றிராணியாரவர்களின் அக்கிராசனத்தின்கீழ் ஒரு கூட்டம் கூட்டப்பட்டது. அதில், ஷை ஸ்தானாதிபதியவர்களுக்கு இங்கிலீஷ், தமிழ், தெலுங்கு ஆக மூன்று பாஷைகளில் வந்தனோபசாரப் பத்திரம் வாசித்து சமர்ப்பிக்கவேண்டுவதற்காக அவைகளை முஸ்திப்பு செய்வதற்கு 8-பேர்களடங்கிய வந்தனோபசாரப் பத்திரக் கமிட்டி ஒன்றும், அவர்களை ஆடம்பரச் சிறப்புடன் வரவழைப்பதற்கு வேண்டுவனவெல்லாம் செய்வதற்கு 42-பேர்களடங்கிய வரவேற்புக் கமிட்டியொன்றுமாக இரு கமிட்டிகள் ஏற்படுத்தப்பட்டன.

வகுப்புவாரி பிரதிநிதித்துவம்.—மாண்டேகு செம்ஸ்போர்டு சீர்திருத்தங்களில் வகுப்புவாரி பிரதிநிதித்துவத்துக்கு வழியில்லாததால், விசேஷமாய்க் கல்விநலம் மிகுதியாய்ப்பெற்றுள்ள பிராமணரே அதிகாரத்தை அபகரித்துக்கொள்வார்கள் என்ற கூப்பாடு பெரிதாயிருக்கிறது. கத்தோலிக்கு இந்தியரைப்போன்ற சிறுதொகையினருக்கு இராஜாங்க விஷயத்தில் இலவலேசமும் செல்வாக்கில்லாமற் போய்விடும். ஆனதுபற்றி, கத்தோலிக்கு இந்தியருக்கு பிரதிநிதித்துவம் கொடுக்கப்படவேண்டுமென்று, இப்போது வரவிருக்கிற பிரான்ச்சிஸ்கமிட்டியாருக்கு தக்ககாரணங்களைக் காட்டி ருசுப்பிக்க, தென்னிந்தியா கத்தோலிக்கு இந்தியர் சங்கத்து காரியதரிசியவர்கள் முயற்சிசெய்துவருகிறார்கள். நிலபுலங்கள், காணி பூமிகள் முதலிய பூஸ்திதியுள்ளவர்களே பிரதிநிதிகளைத் தெரிந்துகொள்வதற்கு பாத்தியதையுடையவர்களானதால், கவர்ண்மென்டுக்கு, நிலவரியாவது, வருமான வரியாவது, ரூ 50-க்குக் குறையாமல் செலுத்துபவர்கள், நமக்குள் இந்த சென்னை இராஜதானியில் எத்தனைபேர் இருக்கிறார்களென்

றும், அத்தகையோர்களெல்லோரும் சேர்ந்து செலுத்தும் வரித்தொகையின் மொத்தம் எவ்வளவென்றும் தெரிந்து கொள்வதற்கு, அவ்விவரங்களைக் கேட்டு ஒரு சுற்றுப் பத்திரம், தென்னிந்தியாவிலுள்ள பங்கு சுவாமிமார்களுக்கெல்லாம் அனுப்பப்பட்டிருக்கிறது. அச்சுவாமிமார்களும், மற்ற கிறீஸ்துவர்களும் இவ்விஷயத்தில் அக்கரைகொண்டு ஷெ கௌரவகாரியதரிசி கேட்கும் விவரங்களைக் கூடிய சீக்கிரத்தில் சேகரித்து, அனுப்பி கத்தோலிக்கு ஜனசமூகத்துக்கு உதவிபுரிவார்களெனக் கோருகிறோம்.

பாப்பானவரும், பிரான்சு, போர்த்துகல் தேசங்களும்.—பிரான்சு தேசத்து இராஜாங்கமும், போர்த்துகல் தேசத்து இராஜாங்கமும் முறையே சத்திய கத்தோலிக்கு வேதத்தை நிராகரித்து, அதற்குச் செய்துவந்த உபகாரங்களையெல்லாம், நிறுத்திவிட்டு, குருக்கள் வசமிருந்த, கோவில், மடம் முதலிய தரும ஸ்தாபனக் கட்டிடங்களையெல்லாம்பிடுங்கிக்கொண்டு, வேதத்துக்கு விரோதமான சட்டங்களை யேற்படுத்தி, கத்தோலிக்கர்களுக்கு இடுக்கண் செய்தபோது, வேதத்துக்கு அதிகாரியாகிய அர்ச். பாப்பானவரோ, அந்த இராஜாங்கங்களை நிந்திக்கவுமில்லை, கண்டிக்கவுமில்லை; பொறுமையோடு மௌனமாயிருந்தார். நமது ஞானத்தந்தை அநுசரித்த பொறுமைக்குத் தக்க வெகுமானத்தை இதோ! சர்வேசுரன் அளித்திருக்கிறார். ஷெ தேசத்து அதிகாரிகள் இப்போது அர்ச். பாப்பானவருடைய சிநேகத்தை நாடவும், அவருக்கு ஸ்தானாதிபதிகளை யனுப்பவும், கத்தோலிக்கருக்கு முன்செய்துள்ள கெடுதிகளுக்குப் பரிகாரந் தேடவும் முயற்சிசெய்துவருவதாகத் தெரிகிறது. அன்னோர்கள் செய்த தீங்குக்குப் பிரதி தீங்கு அப்போதே செய்திருந்தாலாவது, அல்லது அவைகளுக்காக அவர்களுடன் கடிந்துபேசி அவர்களைப் பகைத்துக்கொண்டிருந்தாலாவது, அவர்கள் இப்போது பரிசுத்த தந்தையின் சிநேகத்தைத் தேடுவார்களா? சத்திய வேதத்துக்கு அநுகூலஞ்செய்ய எண்ணுவார்களா? ஆதலினாலன்றோ, "பொறுமை யென்பது கடலினும் பெரிது" என்று சொல்லப்பட்டிருக்கிறது? இப்போது போர்த்துகல் பிரஜாதிபதியாய் நியமிக்கப்பட்ட சேஞோர் சிடோனியா பாயிஸ் என்பவர் பிரமாணிக்கமுள்ள ஒரு கத்தோலிக்கராவர். இவர் அதிகாரத்தில், கத்தோலிக்கருக்கு அநேக நன்மைகள் கிடைக்குமென்று எதிர்பார்க்கலாம்.

DOMESTIC OCCURRENCES.
குடும்ப சுபாசுப விளம்பரங்கள்.

அரைக் கலத்துக்கு மேற்படாத விளம்பரம் ஒன்றுக்கு **2-ரூபாயும்.** முழுக்கலத்துக்கு **4-ரூபாயு**மாக முன்பணம் அனுப்பினாலன்றி, குடும்ப சுபாசுப விளம்பரங்கள் பிரசுரிக்கப்படமாட்டா. ப—ர்.

நன்மரண அறிக்கை

R. I. P.

கர்த்தர் அழைப்பு—வேய்பார்.

ஆண்டவரே எல்லாம் உமது சேவைக்கே என்ற வாக்கியம் நிறைவேற வேம்பாற்றூரில் சமத்தான காரியங்களை மகத்தாகச்செய்துமுடித்துக் காலஞ்சென்ற சந்தியாகு மாதவடியாப் பர்ணாந்து பெரிய அடப்பனாரவர்களின் பௌத்திரரும் எங்கும் எல்லவராலும் நனகறியப்பட்டுக் காலஞ்சென்ற லூயிஸ் வஸ்தியக்கர்வால்ய அடப்பனாரவர்களின் மருமகரும் எம்மின் நேசப்புதல்வரும் சகோதரருமாகிய பெருமைப்பூஷணமும் பெருமைக்களஞ்சியமும் மவுனத்தின் மாதிரிகையும் இனத்தோருக் கின்பமும் மற்றோருக்கு மணமுமான ஈகை. இரக்கம், தயை தாக்ஷண்யமெனும் நற்குணமுடைத்தான சற்குணமுள்ள ஜோன் அந்தோனிப் பர்னாந்து எனப் பெயர் பூண்ட மல்லிகை மலர் தம்மிதள் வாடாவண்ணம் உதிர்ந்த மேரையாய் யிவ்வுலக வாழ்வு அனர்த்தம் கண்மூடி விழிக்குமுன் னழிந்துபோமென்பதை மற்றவர்களுணரும்பொருட்டு, மூன்று நாள் சுரத்தால் வேண்டிய பிரயோகங்கள் செய்தும் குணமுறாது தம் பத்தி விசுவாசத்திற்கொத்தவண்ணம் கடைசி தேவத்திரவிய அநுமானம் யாவும் குறையறப்பெற்று மனவல்லய செபத்தை மறதியின்றி யுச்சரித்தவண்ணம் தமது 33-வது பிராயத்தில் தம் பிரிய மனையாள் அறியாமதலைப் புதல்வர், புதல்வி யிருவரையும், தாய் தந்தையர், சகோதரர், சகோதரிகள் மற்றும் இன சுற்றத்தாரையும் விட்டுத் தமதான்மாவைப் படைத்தோன்வசம் ஒப்புவித்து இம்மதி 15௳ ஞாயிறுவாரம் காலை 9-30 மணிக்கு (இலங்கை) கடுகன்னாவாவில் (Cadugunnawa) மரணநித்திரையாகினர். மறுதினம் சடலத்தை மோட்டர் இரதமேற்றி கண்டிமாநகர் கொண்டுபோய் அர்ச். அந்தோனியார் ஆலயத்தில்வைத்து

வணக்கத்துக்குரிய சொறம் சுவாமிகள் துக்கச் சங்கீதம் பாட தம்மினத்திலுதித்த சங்கையுள்ள ஆசீர்வாதப் பர்னாந்து பிரதர் அருகில் நிற்க வேண்டுதல் மன்றாட்டு நடந்தன. பின சடலத்தை ரதத்திலேற்றி உடன்பிறந்தார் சுற்றத்தார் பின்னேக, பேண்டு வாத்தியம் துக்கச் சங்கீதங்கள் பாட, எம்பரதகுலச் சிறுவர்கள் துக்கத் துவசங்கள் பிடித்தவண்ணம் மையவாடிக்குக் கொண்டு போகப்பட்டது. வண. சொறம் சுவாமிகளால் மையவாடியில் சவச் சடங்காசாரமனைத்து முடிவானதும், மரணித்தவரின் நற்குணம், நற்செய்கை, தேவ பக்தி முதலியவைகளைப்பற்றி ஷை சுவாமிகளால் கல்லுங் கரையும்வண்ணம் பிரசங்கஞ் செய்ய, உடன்பிறந்தார் சுற்றத்தார் ஓலமிட்டழ நல்லடக்கஞ் செய்யப்பட்டது. விசுவாசிகளுடைய ஆத்துமம நித்திய சமாதானத்தில் இளைப்பாறக்கடவது.

இங்ஙனம்,

தந்தை. பொன்னையாப் பர்னாந்து
சகோதரர். N. விசுவாசம் பர்னாந்து
,, N. சந்தியாகு மாதவடியாப் பர்னாந்து
,, X. அலெக்ஸ பர்னாந்து
,, X. சந்தியாகு மாதவடியாப் பர்னாந்து
,, P. அந்தோனி சந்தியாகு மாதவடியாப் பர்னாந்து.

15—9—18.

தூத்துக்குடி.

எனது அன்பார்ந்த தாயார் பிச்சம்மாள் வாஸ் அவர்கள் இன்புளுவென்சா (Influenza) வெனும் கொடிய யுத்த சுரத்தால் பீடிக்கப்பட்டு, வேண்டிய சிகிச்சைகள் செய்தும் குணப்படாமல, தமது 41-ம பிராயத்தில 1918-ம வருஷம் அக்டோபர் மாதம 5-ம் தேதி சனிவாரம் பின்னேரம 9-மணிக்கு கடைசித தேவத்திரவிய அநுமானங்களைச சரிவரப்பெற்றுத தமதருகிலிருந்த யாதா பிதாவையும, மக்கள், பந்து மித்திரர்களையும், அன்னிய பதவியிலிருந்து ஆறுத்துயரடையும் பத்தாவையும், இக்கண்ணீர் கணவாயில் பரதவிக்கவிட்டு தமதாத்துமத்தை ஆண்டவருடைய அடைக்கலத்தில் ஒப்படைத்தார்கள். மறுநாள் சாயரட்சை 5-மணிக்கு கனம் குருப்பிரசாதியுடன் பந்து மித்திரர்கள திரளாய் சூழ, சடலம் அர்ச். சூசையப்பர் கல்லறையில் சேமிக்கப்பட்டது. இதைக் கண்ணுறும் விசுவாசிகளே, இவ்வாத்துமம சமாதானத்தில் இளைப்பாற வேண்டிக்கொள்ளக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

இங்ஙனம,

அன்னையை இழந்து பரிதபிக்கும் மகன்
தயாளசாமி பர்னாந்துவாஸ்.

15—10—18. R. I. P.

பாணந்துறை, சிலோன்.

தூத்துக்குடி தெற்கு எம்பரர் தெரு ஸ்ரீமான் தொமமாஸ் பருனாந்து அவர்கள் மக்களில் ஒருவரும் மெசர்ஸ் எம. எக்ஸ். மோத்தா அன் பிரதர்ஸ் அவர்கள் ஷாப்பில் வேலைபார்த்துவந்தவருமாகிய ராஜபுஷ்பம் பருனாந்து தமது 18-ம் பிராயத்தில் நியுமோனியா என்கிற கொடிய வியாதியினால் பீடிக்கப்பட்டு, போபோன சிங்கள வைத்தியராலும் ஆங்கிலேய டாக்டராலும் ஔஷதம் கொடுக்கப்பெற்றும் சுகம்பெறாமல் தேவத்திரவிய அநுமானங்கள் கொடுக்கப்பட்டு, அந்தோ நாளது மாதம் 12௳ சனிக்கிழமை இரவு சுமார் 8-மணியளவில் தமது நேசபிதா பெந்துக்கள் மித்திரா மத்தியில் அமரிக்கையோடு மரணமாயினர். மறு நாள் சாயரட்சை பிதாவும பந்துக்களும மித்திரர்களும் அழுது பிரலாபித்து சூழ்ந்து நிற்க, இவருடைய சடலம் கனம. செம்ச சுவாமிகளால பாணந்துறை பரிசுத்த வியாகுலமாதா கோவிலில் வைத்து மந்திரிக்கப்பெற்று, அக்கோவிலைசசேர்ந்த மையவாடியில் நல்லடக்கம செய்யப்பட்டது. இப்பரிதாபமான துக்கச் செய்தியை வாசிக்கும் சகோதரர்களே, இந்த ஆத்தும இளைப்பாற்றிக்காக ஒரு பர., பிரி., திரி. வேண்டிககொள்ளும்படி மிக வாய்க் கேட்டுக்கொள்ளுகிறேன.

14—10—1918. பாண்டியன்.

இரங்கூன்.

எனது அருமை மைத்துனியும் மெஸ். கண்டிராக்டர் ம-ள-ள-ஸ்ரீ பலலாரி S. மனுவேல் அவர்களின் கனிஷ்ட புதலவியும தேகான் (Thegon) B. O. C. யில் எட் கிளார்க்குமாகிய Mr. J. L. அலெக்சாண்டர் அவர்களின பிரிய மனைவியுமாகிய ஜெயசீலியமமாள் தனது 20-ம் பிராயத்தில கலியாணமாகி, ஒரு வருஷத்திற்குள் காலரா எனனும கொடிய வியாதியில எவ்வித சிகிச்சைக்கும குணப்படாமல், தனது வயது சென்ற தாய் தந்தையையும் கணவனையும் மற்ற பந்து மித்திரர் யாவரையும் பரிதபிக்கவிட்டு, கர்த்தருக்குள் நித்திரை அடைந்தனள். அன்று பகல 2-மணிக்கு புரோம் (Prome) ரோமன கத்தோலிக்கு கலலறையில் நல்லடக்கம் செய்யப்பட்டது. ஆனபடியால் மேற்படி ஆத்தும இளைப்பாற்றிககாக ஆகஷ்டு மாதம 19-௳ தேதி திங்கள கிழமை காலை 6½-மணிக்கு இரங்கூன அர்ச. அந்தோனியார் ஆலயத்தில சங். J. B. மூர்லான குருமுதசிகர் அவர்களால் பெரிய பாடல்பூசையும பிறகு தூமபா மந்திரிப்பும நிறைவேறியது. இதைக கண்ணுறும கத்தோலிக்கு சகோதரர்கள் இவளுடைய ஆத்தும இளைப்பாற்றிக்காக ஒரு பர., பிரி., திரி. வேண்டிக்கொள்ள மிக விநயத்துடன் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

இப்படிக்கு,

2—9—1918. மரி. இலாசர் பிள்ளை

திவ்ய இருதய மரியின் சரித்திரம்

என்ற ஒரு புதுப் புத்தகம் அச்சிட்டுத் தயாராயிருக்கின்றது.

நண்பர்களே! இதனை வாங்கி வாசியுங்கள்.

பாப்பரசர்களுள் நிகரற்ற செல்வாக்குமபிரக்கியாதியும் படைத்திருந்து காலஞ்சென்ற 13-ம் சிங்கராயர் 1899-ம் வருஷத்தில் மனுக்குல முழுவதையும் சேசுவின் திரு இருதயத்துக்குக் காணிக்கையாக ஒப்புக்கொடுத்தார். இக்காணிக்கையால் தேவ கிருபையினின்று ஏராளமான நன்மைகளும், வரப்பிரசாதங்களும் இப்பூலோகத்தின்மீது பொழியப்படும் என்று அவர் நம்பியிருந்தார். இதனை, தாம பாப்புவாய்த் திருசசபையை ஆண்டுவந்தகாலத்தில் செய்த காரியங்களுள் அதிமுக்கியமானதென்றும் கூறியுள்ளார். ஆனால், இவ்வருமையான திவ்ய காரியத்தை அவர் செய்து முடிப்பதற்கு அரிய பெரிய புண்ணியங்களில் சிறப்புற்றோங்கிய ஓர் கன்னிகையால் தூண்டப்பட்டார். இப்புண்ணியவதியின் பெயர்தான் திவ்ய இருதயத்தின் மரி சகோதரி துரோஸ்ட் சூ விஷ்ஷேரிங் என்பதாகும். சேசுவின் திரு இருதய பக்தியில் சிறப்பும் சிரேஷ்டமும் பெற்ற அர்ச்சிய சிஷ்டவர்களில நமது கன்னிகாரத்தினமும் ஒருவள்.

இவளை 19-ம் நூற்றூண்டின் ஜெர்துருத் மரி அல்லது மார்கரீத் மரி என்றால் மிகையாகாது—ஐரோப்பா பாஷைகளில் இவளுடைய சரித்திரம் விரிவாய் எழுதப்பட்டிருக்கிறது. இக்கன்னிகை தானே தன் கைப்பட எழுதிய அவளதுசரித்திரம் பக்தி இரசமும் தேவ அருளும் நிறைந்த வசனங்களால் துலங்குகினறது. இவைகளை ஆதாரமாகக்கொண்டு இப்புண்ணியசீலியின் சரித்திரம் நந்தமிழ் நாட்டுக் கிறீஸ்துவர்களுக்குப் பயன்படுமாறு எளிய இனிய தமிழ்நடையில் எழுதப்பட்டுள்ளது.

ஆகவே! இதனை வாங்கிவாசித்து இன்புறுங்கள்!! இதன் விலை 6-அணா. தபாற் செலவு 1-அணா. வேண்டுவோர் அடியிற்கண்ட விலாசத்தாருக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

The Rev. Fr. A. R. JOHN, THE "GOOD PASTOR" PRESS,
St. Francis Xavier's Church, Broadway, ***Madras.***

சென்னப்பட்டணத்தில் கத்தோலிக்கருக்கு சத்திரம்.

சென்னப்பட்டணத்தில் கத்தோலிக்கருக்கு ஒரு சத்திரம் தேவையென்பது நெடுநாளாய் அனுபவித்துவந்த குறை. வெளியூரிலிருந்து வரும் கத்தோலிக்குச் சகோதரர்கள் தங்க விடமின்றி தவிக்கவேண்டியதாயிருப்பது எல்லோருக்குந் தெரிந்தவிஷயம்.

இக்குறையை நிவர்த்திக்க மயிலாப்பூர் மேற்றிராணியாருடைய அநுமதியின்பேரில் சங். எல். எக்ஸ். பெர்நாந்திஸ் சுவாமிகளின் தலைமை வகித்து ஒரு கமிட்டி சென்னையி லேற்பட்டிருக்கிறது. இக் கமிட்டியாரால் சிறுகச் சிறுக இதுவரையில் சேகரித்திருப்பது ரூ. 1,538—15—0. ஒரு தக்க சிறு வீடாவது கட்டிமுடிக்க குறைந்தது ரூ. 5,000ஆவது வேண்டும்.

இக்கருத்துக்காக கத்தோலிக்குச் சகோதரர்கள் தங்கள் தங்களால் கூடிய தொகையை அடியிற்கண்ட விலாசத்துக்கு அனுப்பி இப்பொதுநலக் காரியத்துக்கு உதவி புரிவார்களென கோரப்படுகிறது.

	ரூ.	அ.	பை.
ஏற்கெனவே வரவேற்றுக் கொள்ளப்பட்ட தொகை	1,538	15	0
பந்தர் தெருவு சுருட்டு வியாபாரிகள் (அக்டோபர்மீ த்துக்கு) ...	30	0	0
ஆக மொத்தம்	1,568	15	0

Rev. Fr. L. X. FERNANDEZ, North Georgetown, Madras, E.

லீலியும் ரோசாவும்.

ஆதி திருச்சபையில் அஞ்ஞான மார்க்கததிலிருந்து மனம் திரும்பின இரு செல்வமாது சிரோமணிகளைப்பற்றிய இசசரிதையானது 417-பக்கங்கள் அடங்கயது. இஃது திருச்சினாப்பள்ளி அர்ச். சூசையப்பர் கலாசாலையில் பேர்பெற்று காலஞ்சென்ற பிரான்ஸிஸ் பில்லியார்டு சுவாமியார் அவர்களுடைய ஞாபகத்துக்காக, அவர்களுடைய கிறீஸ்துவ மாணாக்கர்களில் ஒருவரால் எழுதப்பட்டது. புஸ்தகம் வேண்டுவோர் மதுரை செனட் மேரிஸ் ஸ்கூல் உபாத்தியாயர் மகா-ஙா-ஙா-ஸ்ரீ சூசை கோவிந்தராவுக்காவது அல்லது நல்லாயன் அச்சியந்திரச்சாலை மானேஜருக்காவது எழுதிப் பெற்றுக்கொள்ளலாம். தபால்கூலி அன்னியில் இந்தியாவில் எந்த இடத்திற்கும் விலை 12-அணா; இதர நாடுகளுக்கு விலை ரூபாய் 1. சூசை கோவிந்தராவ், ஏஜண்டு, மதுரை.

குறைந்த விலை! **தேம்பாவணி விருத்தியுரை.** குறைந்த விலை!!

"நல்ல ஆயன்" கையொப்பக்காரர்களுக்கு ஷ புஸ்தகம் குறைந்த விலை 3-ரூபாய்க்கு விற்கப்படும். வி. பி. சார்ஜ் பிரத்தியேகம்.

A. F. SIMON, Portuguese Church St., G. T., MADRAS.

கிறிஸ்ட்மஸ்—நியு இயர் 1918—1919!

நமது கர்த்தராகிய திவ்ய குழந்தை சேசுவின் ஜனன தினமாகிய "கிறிஸ்ட்மஸ்" சமீபத்தில் நெருங்கிவிட்டது. இந்த மகோற்சவத்திற்காக நாங்கள் புதிதாக சீமையிலிருந்து அநேக புதுமாதிரியான, கிறிஸ்ட்மஸ் அன்ட் நியு இயர் கார்டுகளும், வேதக் காட்ஸ்களும், அழகான போஸ்ட் கார்டு படங்களும் கிறிஸ்ட்மஸ் செக் புஸ்தகமும். வேதப்படம்போட்ட லெட்டர் பேப்பர்களும். தமிழ் நாவல்களும், புதியமாதிரி ஜெபமாலை. உத்தரியம். படம் முதலியவைகளும், நூதன விளையாட்டுச் சாமான்களும் ஏராளமாய்த் தருவித்திருக்கிறோம். இதற்காக ஒரு விசேஷ காட்லாக் விலை லிஸ்டு தயார்செய்திருக்கிறோம். விலை லிஸ்டு இனாமாக எல்லோருக்கும் அனுப்பப்படும். உடனே ஒரு போஸ்ட் கார்டு எழுதுங்கள். மறு தபாலிலே உங்களுக்கு துரிதமாக அனுப்புவோம்.

X. P. PAIVA,
No. 10, Consistary Building,
COLOMBO.

ச. பி. பாய்வ,
நெ. 10, கன்சிஸ்டேரி பில்டிங்,
புதுப்பேட்டை, கொழும்பு.

THE AMERICAN ORIGINAL CHOLERA MIXTURE.

விஷபேதி: என்னும் மஹா பயங்கரமான நோயானது உலகத்தின் பலபாகங்களிலும் வருஷாவருஷம் தோன்றி ஆயிரக்கணக்கான ஜனங்களைக் கொள்ளைகொண்டுபோகின்றது. ஐயோ! பரிதாபம்!

இந்நோய்: காலவித்தியாசத்தாலும். சீதோஷ்ணமாறுதலாலும். அழுகிய குப்பைகூளங்களின் அசுத்த ஆகாயத்தினாலும். கெட்டுப்போன மச்ச மாமிஸங்களின் துர்க்கந்தத்தாலும், நன்றாய் பக்குவம்செய்யப்படாத போஜனபதார்த்தங்களையும், கெட்டுப்போன காய்கனிகளையும் புசிப்பதினாலும், அசுத்த ஜலத்தைப் பானம்பண்ணுவதாலும், இன்னும் இவைபோன்ற பல காரணங்களினாலும் உண்டாகின்றது.

இந்நோயினின்று தப்பித்துக்கொள்வதற்கு அமெரிக்காதேசத்துப் பேர்போன வைத்ய சாஸ்திரி ஒருவரால் கண்டுபிடிக்கப்பட்டு, உலகெங்கும் பிரஸித்திபெற்ற "அமெரிக்கன் ஒரிஜனல் காலரா மிக்ஷர்" என்னும் ஔஷதமொன்றுதான் உத்தமமானதென்று யாம் உறுதிகூறுவோம்.

கள்ளர்! இராக்காலங்களில் வீடுகளில் பிரவேசிக்குமாப்போல்; இந்நோயும் விசேஷமாய் இராக்காலங்களில்தான் ஆரம்பமாகின்றது. ஆகையால்; ஒவ்வொரு வீடுகளிலும், கன்னியர் சந்நியாசர் மடங்களிலும், போர்டிங் அவுஸ், ஸ்கூல், ஒட்டல் முதலான இடங்களிலும், யாத்திரைசெய்வோர் கைகளிலும் அவசியம் வைத்திருக்கவேண்டுமென்று யாம் சிபாரிஸ் செய்கின்றோம்.

புட்டி விலை ரூபா 1—0—0, தபால் சார்ஜ் பிரத்தியேகம்.

அமெரிக்கன் ஒரிஜனல் கம்பெனி,
41. மூன்றுவது தெரு, புதுப்பேட்டை,
மதறாஸ்.

ஓர் வேண்டுகோள்.

அர்ச். அடைக்கலமாதா கோவில் கட்டிட தருமம்.



1900௵ சேலம் ஜில்லா கிறிஷ்ணகிரி தாலூக்கா, எலத்தகிரி கிராமத்தில், அர்ச். அடைக்கலமாதா பேரால் ஷை கோவில் கட்டத் துவக்கி, பணக் குறைவால் இன்னும் முடிவுபெறாமலிருக்கின்றது. இன்னுஞ் சுமார் 4,000 ரூ. தேவை. அவ்வாண்டவளுடைய பக்தர்கள் செய்யும் பொருளுதவி வீண்போகாது. அவர்களையும் அவர்களுடைய குடும்பங்களையும் அவ்வாண்டவள் தம்முடைய அடைக்கலத்தில் வைத்து பாதுகாப்பாள். எவ்வளவு சொல்ப தருமமும் எம்மாலியன்ற நன்றியறிதலுடன் ஒப்புக்கொள்ளப்படும்.

எமது விலாசம் :—

யேஸ். டாமினிக் சுவாமியார், எலத்தகிரி, வரட்டனபல்லி போஸ்ட்,
கிறிஷ்ணகிரி தாலூக்கா.

MAY & Co.

கிறிஸ்ட்மஸ் புது வருஷ நூதன பல சாமான்களின் கேட்லாக் தயாராகின்றது, கேட்லாக் வேண்டியவர்கள் ½-அணா ஸ்டாம்ப் அனுப்பி பெற்றுக்கொள்ளலாம். ஒரு ரூபாய் தொகை வரையில் சாமான் வேண்டியவர்கள் மேற்படி தொகையோடு தபால் செலவையும் சேர்த்து ஸ்டாம்பு அனுப்பினால்மாத்திரம் சாமான் அனுப்பப்படும். தாங்கள் கேழ்க்கும் சாமானின் கிரயத்தில் பேர்பாதி பணம் முன்பணம் அனுப்பவேண்டும்.

கிறிஸ்ட்மஸ் புது வருட திருநாளுக்குரிய, (Christmas, New Year) கார்டுகளும், பக்திக்குரிய சாமான்களும், சிறுவர்களுக்கும், பெரியவர்களுக்கும் வேண்டிய கமிஸ், பனியன், குட்டை, மேஜோடு, டய், காலர், பெல்ட்கேப், மப்லர், கரை வேஷ்டி, சாய வேஷ்டி, சரிகை அங்கவஸ்திரம், பட்டு குட்டைகள், குடைகள், பாதரட்சைகள், பட்டு சேலைகள், துணி சேலைகள், ரவுக்கைகள், சிறுவர்களுக்கு வேண்டிய சூட்டுகள், பிராக்குகள் முதலிய ஜவுளிகளும், கர்த்தர் பிறந்த தினத்தைக் கொண்டாடும்பொருட்டு சிறுவர்களுக்கு வேண்டிய விளையாட்டு சாமான்களும், வெகு சரசமாய் கொடுக்கப்படும். வீடுகளில் பூச்சியமாய் சட்டத்தில் வைக்கப்படும் அழகான சேசுவின் திருஇருதய இங்கிலீஷ் வர்ணப்படம், ஒன்று விலை அணா 12, ரூ. 1, ரூ. 2. 1919-வது வருட அழகான வர்ண வேதபடம், தேவமாதா, இருதய ஆண்டவர், திருக்குடும்ப முதலிய பட காலண்டர். விலை அணா 3.

5 ரூபாய்க்கு குறையாமல் சாமான் வாங்குகிறவர்களுக்கு ஒரு அழகான காலண்டர் இனாமாக அனுப்பப்படும், பீட ஜோடினைக்காக துணிகளால் செய்யப்பட்ட புஷ்பக் கொத்துகள் அவரவர் ஆர்டர் பிரகாரம் செய்தனுப்பப்படும்.

Messrs MAY & Co.,
Royapettah, MADRAS.

LAGHIAM DEPOT.

No. 44, Nambooliyar Street, Sowcarpet, Madras.

பூவுலக வாழ்க்கைக்கு இன்றியமையாத சிங்க பலத்தைத் தருவதெது?

அமிர்த சஞ்சீவி லேகியமும், அய்க்காந்த செந்தூரமுமே.

இதை அவசியம் முழுதும் வாசியுங்கள்.

(முறையாய்ச் செய்த அயக்காந்த செந்தூரத்தைக் காட்டிலும், தேகபலத்தை தரும் ஔழதம் வேறொன்றுமில்லை.)

விளம்பரம்.

இதைக் கண்ணுறும் கனவான்களே!

இந்த லேகிய செந்தூரமானது சாமான்யமானதன்று; அபாரமான சத்துவத்தைத் தரக்கூடிய சக்தி அமைந்துள்ளது. உறுதியாய் இதை நம்பி ஒரே தடவை வாங்கியுண்ண எமது மருந்தின் விசேடகுணம் நன்கு விளங்கும்.

இந்த லேகிய செந்தூரத்தால் நிவர்த்தியாகும் முக்கிய குணங்களாவன.

துர்நடத்தையா லுண்டாகும் 20-வகை மேகரோகங்கள், சூலை ரோகம், குன்ம ரோகம், பித்த பாண்டு, கைகால் முடக்கு, ஓடி வாய்வு, பித்த எப்பம், நெஞ்சு, தொண்டை எரிச்சல், வயிறு உப்பிசம், அஜீரணம், பசி யில்லாமை, தாது ஹீனம், தேக உளைச்சல், கண்ணில் நீர் வடிதல், சோம்பல், நித்திரை யில்லாமை, தலை சுழற்றல், நீர் இறங்கும்போது பொறுக்கமுடியாத வாதையைத்தரும் தந்திமேகம் முதலியவைகளை ஆச்சரியப்படத்தக்க விதமாய் நீக்கிவிடும். பயங்கரமான மேக வெட்டை சம்பந்தமான வியாதிகளை பத்தே வேளையில் முழுதும் குணமாக்கி சப்தநரம்புகளையு மிக முறுக்கேற்றி அபரிமிதமான ரத்த விர்த்தியைப் பெருக்கி சக்தியைத் தருவதில் இதற்கு மிஞ்சின லேகிய பஸ்பம் வேறொன்றுமில்லை என்று நாம் உறுதியாகச் சொல்லுவோம். இதல்லாமல் இளைத்த தேகத்தை புஷ்டியாக்கி தேக தடிப்பு, நகக்கண் வெளுத்திருத்தல் முதலிய வியாதியைக் கண்டித்து, தினந்தோறும் மலத்தைத் தாராளமாய்ப் போக்குவதில் இந்த லேகிய செந்தூரமே முதன்மையான தென்பதை எமது அனுபவத்தில் கண்டிருக்கிறோம். நிற்க இந்த லேகிய செந்தூரமானது மேற்கண்ட வியாதிகளைக் கண்டிப்பாய் நிவர்த்தியாக்குமா என்னும் சந்தேகமுடையோர் பரீக்ஷார்த்தமாக முதலில் 48-நாளாவது வாங்கியுண்ண இதன் அபார குணம் தெரியவரும். தவிர யாங்கள் இம் மகத்துவம் பொருந்திய லேகிய செந்தூரத்தை எவ்வளவு சிறப்பித்து கூறியபோதிலும் தகும். தவிர இதை நோய் உள்ளவரேதான் சாப்பிடவேணும் என்ற அவசியமில்லை, யாவரும் சாப்பிடலாம். நோய் உள்ளவர்களை விட நோய் இல்லாதவர்கள் எண்ணிக்கையாக 48-நாள் லேகிய செந்தூரத்தை யாதும் பத்தியமின்றி சாப்பிட சாவளவும் துற்பலமே எற்படாது, இது சத்தியம். தருவித்து எண்ணிக்கையாக சாப்பிட்டு 10-நாளைக்குள் குணம் தராவிடில் உடனே தெரியப்படுத்தினால் கட்டாயம் வாங்கிய பணம் வாட்ஸ் செய்யப்படும். தவிர மேற்காட்டிய நோய் உடையோர் 48-நாள் சாப்பிடுவார்களேயானால் முழுதும் குணமாவார்கள். அப்படி குணம் தராவிடில் யாங்கள் உத்திரவாதியாவோம். அதாவது யாங்கள் இவ்வளவு அருமையான லேகிய செந்தூரத்தை எவ்வளவோ சிரத்தையுடன் நல்ல பெயர் வாய்க்கும்பொருட்டு கொஞ்சமேனும் திரேக சிரமம் பாராமல் எம்மால் கூடிய வரையில் கஷ்டப்பட்டு முடித்து பரோபகார்த்தமாக ஜனங்கள் வாங்கியுண்டு திரேகத்தை பொன்மய மாக்கிக்கொண்டு நீடூழிகாலம் வாழ்வார் என்னும் அபிப்பிராயத்தால் உண்மையில் இதை வெளியிட்டோம். இந்த லேகிய செந்தூரமானது (போலிப்பண்டித பொய்யர்களாகிய வைத்தீய வாசனையே யில்லாத சில தாந்தோன்றி தம்பிரான்கள் பணத்தை கவரும்பொருட்டு வெளிப்படுத்தும் விளம்பரத்தில் இதுவும் ஒன்று என எண்ணவேண்டாம்.) இவ் வருமை வாய்ந்த லேகிய செந்தூரத்திற்கு பொன் மெடல், வெள்ளி மெடல் பெற்றதல்லாமல் ஆயிரக்கணக்கான யோக்கியதா பத்திரங்கள் பெற்றிருக்கிறோம். எமது லேகிய செந்தூரத்தை உண்டவர்

உடனே எமது கம்பெனிக்கு யாம் கோராதபடியே எஜண்டாய் நாடுவார்கள். இது உண்மை. அப்படி எஜண்டாய் சேருவோருக்கு மருந்துகட்டு மட்டும் 100-க்கு 25 கமிஷன் தரப்படும். அப்படி ஏற்பட்டபோதிலும் மாதத்திற் கொருவிசை கணக்கு பைசல் செய்யப்படும். எமது லேகிய செந்தூரமானது யாம் சொன்ன வரையில் குணத்தைக் கொடுக்கிறது என்றதைப்பற்றி எத்தனைதரம் பிரமாணம் செய்யச் சொன்னபோதிலும் காத்துக்கொண்டிருக்கிறோம். இது உண்மை. ஒரேதரம் தருவித்து பாரும், எமது உண்மை நன்கு விளங்கும்

வாதாதிக்க தோஷத்தினாலாவது. தரப்பியாசத்தினாலாவது. அதிக மனக்கவலையினாலாவது, அடிக்கடி உண்டாகும் நோயினாலாவது, ஸ்திரீ வியாதியினாலாவது, மற்றெந்தக் காரணத்தினாலாயினும் பலமிழந்தவர்கள் எண்ணிக்கையாக ஷை பண்டிதருடைய லேகிய செந்தூரத்தை புசிப்பார்களானால் தேகாரோக்கியம், வலிவு, அழகு முதலியது பெற்று ஆநந்தத்தில் மூழ்கும்படிச் செய்யுமென்பதில் தடையேயில்லை.

வெளியூர் கனவான்கள் இந்த லேகியத்தில் முழுநம்பிக்கைவைத்து ஒரே வொருதரம் பரீக்ஷிப்பார்களானால், அவர்கள் அடையும் ஆநந்தத்திற்கு அளவேயில்லை. லேகிய செந்தூரத்தினாலுண்டாகும் அற்புத குணத்தைத் தெரிந்துகொண்டபின் நமது லேகியத்துக்குச் சிபார்சு செய்யும்படி உங்களை நாம் கேட்டுக்கொள்ளாமலே உங்கள் பந்துக்கள், நேசர் முதலியவர்க்கு நீங்களே ஷை பண்டிதருடைய லேகிய பஸ்பத்தின் சிறந்த குணத்தையும், நீங்கள் அதனாலடைந்த ஆனந்தத்தையும் எடுத்துக்கூறி சிபாரிசு செய்வீர்கள் என்பது நிச்சயம்.

இந்த லேகிய செந்தூரக்கிற்கு பத்தியமே கிடையாது. சகலமும் நீக்குதலின்றி மருந்து சாப்பிடும் காலத்தில் வயிற்றிற்கு துரோகம் செய்யாமல் சாப்பிடவேண்டியது. ஏனென்றால் பசி அதிகமாய் எடுக்கும். பச்சைப்பயறு கொழம்பு, தயிர், பால், கறி, மார்க்கண்ட சூப்பு, நெய் இவை அதிகமாய் தேகத்தை தணிக்கக்கூடிய விதமாய் தாமதம் செய்யாமல் சாப்பிட்டு வரவேண்டியது. பசிக்கும்போதெல்லாம் பலகாராதிகள் சாப்பிடல் வேண்டும். தயிர், பால், நெய் முதலியவைகள் எருமைப்பால், பசும்பால், ஆட்டுப்பால் எதுவாயிருந்தாலும் சந்தேகமின்றி சாப்பிட்டு வரலாம்.

இவ்வருமை வாய்ந்த லேகிய செந்தூரத்தை மட்டும் ஒருவர் தருவித்து எண்ணிக்கையாக 48-நாள் சாப்பிடுவார்களேயானால் அது தேகத்தில் ஊற ஊற, மேகமெல்லாம் சூரியனைக்கண்ட பனிபோல் நீங்கி தேகமானது வலுத்து புதியரத்தம் பரவி தன் வாழ்நாள் பரியந்தம் தேகமானது இளைக்காமல் முற்றிலும் அக்களிப்போடு ஆஜானுபாஹுவாய் விளங்குவார். இதை புருஷன் பெண்சாதி இருவர் எக காலத்தில் ஒற்றுமையாய் சாப்பிட்டு வந்தார்களேயானால் உதிக்கு மக்கள் யாதொரு நோய் இல்லாதபடி ரொம்பவும் தேஜசாய் தோன்றுவார்கள். இதைப்பற்றிப் பிரமாணமாய் சொல்லுவோம். நல்ல வாலிபதசையைக் கட்டாயம் அடைவார்கள். இது உண்மை. இதைப் பற்றி இன்னும் எழுதமுடியாது.

24-நாள் சாப்பிடக்கூடிய லேகியமும் சேந்தூரமும் விலை ரூ 1—12—0.

போஸ்டேஜ் அணா 4.

ஒரே காலத்தில் 48-நாள் மருந்து வாங்குவோர்க்கு போஸ்டேஜ் இனாம்.

எமது விலாசம்:—

லேகியம் டிபோ,

நெ. 44, நம்புலையர் வீதி, சௌக்கார்பேட்டை,

மதராஸ்.

விநோதம்.

காற்றடைக்கும் தலையணை: இதிலிருக்கும் குழாயிலுள்ள திருகாணியைக் கழற்றி, வேண்டிய அளவிற்குக் காற்றை யடைத்துத் திருகாணியை முன்போல் திருகிவிட்டால் மிக்க ஆரோக்கியமான தலையணையாயுதவும். பிறகு திருகாணியைக் கழற்றிக் காற்று வெளிவந்தபின் திருகிவிட்டு மடித்து ஜோப்பில் வைத்துக்கொள்ளலாம். இது சிரநோயுள்ளவர்களுக்கும், பிரயாணிகளுக்கும் சாதாரணமாய் யாவருக்குமே மிக்க பிரயோஜனமானது. தலையணை 1-க்கு அணா 8.

தபாற்கூலி பிரத்தியேகம்.

தனலட்சுமி கம்பெனி,

நெ. 6, வெங்கடேச மேஸ்திரி தெருவு,

சௌக்கார்பேட்டை, சென்னை.